කර්මාන්ත හා වාණිජ කටයුතු අමාත්‍යාංශය

கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சு

# Ministry of Industry & Commerce



වාර්ෂික කාර්යසාධන වාර්තාව

வருடாந்த முன்னேற்ற அறிக்கை

# 2012 Annual Progress Report

# வருடாந்த செயலாற்றுகை அறிக்கை 2012

**கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சு**

இந்த அறிக்கை சிங்கள மற்றும் ஆங்கில மொழிகளில் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டுள்ளது.

# தொலைநோக்கு

*"சக்திமிக்கவணிகச் சூழலின் மூலம் சர்வதேசபோட்டியையேற்படுத்தும் வல்லமையுள்ளகைத்தொழில்துறையினை இலங்கையினுள் உருவாக்கல்."*

# செயற்பணி

*"மக்களின் வாழ்க்கைத்தரத்தினைஉயர்த்தக் கூடியதும்,உயர் பெறுமதிசேர்த்தஉற்பத்திகளைமேற்கொள்ளுகின்றதும்,தொடர்ந்து மாறுகின்றவர்த்தகப்பரிபாலனத்தையுடையதும்,நிலைத்திருக்குகக்கூடியதும்மற்றும் போட்டியையேற்படுத்தும் வல்லமையுள்ளதுமானநிறுவனத்தின் அபிவிருத்திக்குஉகந்த சூழலைஉருவாக்குதல்"*

# கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சின் பிரதான பணிகள் ................

- அறிவுசார் உற்பத்தி கைத்தொழில் பிரிவினை உருவாக்கல்.
- கூட்டு பெறுமதி சேர்க்கப்பட்ட பொருட்களின் ஏற்றுமதியை அபிவிருத்தி செய்தல் மற்றும் முன்னேற்றுவதன் மூலம் ஏற்றுமதி வருமானத்தினை அதிகரித்தல்.
- ஆரோக்கியமான வணிகச் சூழலை உருவாக்குதல்

# கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சின் விடயப்பரப்பு

22.11.2010ம் திகதி இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானி அறிவித்தலின் ஊடாக கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சுக்குச் சாட்டப்பட்டுள்ள பணிகள் பின்வருமாறு அமையும்.

1. மகிந்த சிந்தனையின் எதிர்கால நோக்கு மற்றும் அரசினால் செயற்படுத்துவதற்கு எதிர்பார்க்கும் ஏனைய தேசிய கொள்கைகளின் அடிப்படையில் கைத்தொழில் மற்றும் வணிக விடயத்திற்கு மற்றும் அதற்கு சமாந்தரமான திணைக்களம் மற்றும் நியதிச்சட்ட நிறுவன விடயங்களுக்கு உரிய கொள்கை, நிகழ்ச்சித்திட்டம் மற்றும் கருத்திட்டம் என்பவற்றை ஒருங்கிணைத்தல்.

2. உரிய நோக்கத்தினை பூர்த்தி செய்வதற்காக தேசிய திட்டமிடல் அதிகாரிகளுடன் இணக்கப்பாட்டுக்கு வந்து கால எல்லை மற்றும் வரவுசெலவுத்திட்ட வள எல்லைக்குள் மேற்குறித்த கொள்கை, நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை செயற்படுத்துதல்.

3. அமைச்சின் விடயப்பரப்புக்குள் உள்ளங்கும் பொது மக்கள் சேவையினை வினைத்திறன் மற்றும் மக்கள் விரும்பும் வகையில் வழங்குதல்.

4. வீணாக்குதல் மற்றும் துஷ்பிரயோகம் என்பவற்றை ஒழித்து, அமைச்சின் பணிகள் பூர்த்திசெய்வதை உறுதிப்படுத்தவதற்கு ஏற்றவகையில் புதிய முகாமைத்துவ தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்துவதன் மூலம் அனைத்து முறைகளையும் மீள்நிர்மாணம் செய்தல்.

5. புலமைச் சொத்துக்கள் பற்றிய சர்வதேச உடனபடிக்கையை நிர்வகிப்பதற்கு உரிய பணிகளின் வெளியிடல் உரிமை மற்றும் உலக புலமைச் சொத்துக் காரியாலயத்தின் வெளியிடல் உரிமை

6. ஏற்றுமதி அபிவிருத்தி மற்றும் ஆலோசனைச் சேவை

7. சர்வதேச வியாபாரத் தொடர்புகள்

8. வெளிநாடுகளில் இலங்கை வியாபார நடவடிக்கைகளின் பிரதிநிதித்துவம்

9. போட்டித்தன்மை உருவாக்கல்

10. கைத்தொழில் மேம்படுத்தல் மற்றும் அபிவிருத்தி

# கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சின் கீழ் செயற்படும் பிரிவுகள் மற்றும் நிறுவனங்கள்

## கைத்தொழில் பிரிவு

கைத்தொழில் கொள்கை மற்றும் அபிவிருத்திப் பிரிவு

பிரதேசக் கைத்தொழில் அபிவிருத்திப் பிரிவு

அபிவிருத்திப் பிரிவு 1

அபிவிருத்திப் பிரிவு 2

அபிவிருத்திப் பிரிவு 3

கைத்தொழில் பதிவு மற்றும் முகாமைத்துவ தகவல் பிரிவு

உற்பத்தித்திறன் முன்னேற்றப் பிரிவு

இராசயன ஆயுத உடன்படிக்கையினை செயற்படுத்தும் தேசிய அதிகாரசபை

கூட்டுத்தாபனங்கள் மற்றும் சட்டபூர்வ சபைகள் பிரிவு

வரையறுக்கப்பட்ட இலங்கை கஹுட்டகஹு காரியக் கம்பனி

வரையறுக்கப்பட்ட மாந்தை உப்புக் கம்பனி

தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை

புடவைக் கைத்தொழில் அபிவிருத்திப் பிரிவு

புடவைக் கைத்தொழில் திணைக்களம்

இலங்கை புடவை மற்றும் ஆடை நிறுவனம்

## வணிகப் பிரிவு

வணிகத் திணைக்களம்

கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்

இலங்கைத் தேசிய புலமைச் சொத்துக் காரியாலயம்

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை

# பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| **கைத்தொழில் பிரிவு** | |
| பேரினக் கொள்கைப் பிரிவு | 01 |
| பிரதேசக் கைத்தொழில் அபிவிருத்திப் பிரிவு | 02 |
| அபிவிருத்திப் பிரிவு – 1 | 08 |
| அபிவிருத்திப் பிரிவு – 2 | 11 |
| அபிவிருத்திப் பிரிவு – 3 | 12 |
| கைத்தொழில் பதிவு மற்றும் முகாமைத்துவ தகவல் பிரிவு | 14 |
| உற்பத்தித்திறன் முன்னேற்றப் பிரிவு | 16 |
| இராசயன ஆயுத உடன்படிக்கையினை செயற்படுத்தும் தேசிய அதிகாரசபை | 18 |
| கூட்டுத்தாபனங்கள் மற்றும் சட்டபூர்வ சபைகள் பிரிவு | 20 |
| வரையறுக்கப்பட்ட இலங்கை கஹுட்டகஹு காரியக் கமபனி | 22 |
| வரையறுக்கப்பட்ட மாந்தை உப்புக் கம்பனி | 23 |
| தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை | 24 |
| புடவைக் கைத்தொழில் அபிவிருத்திப் பிரிவு | 26 |
| புடவைக் கைத்தொழில் திணைக்களம் | 30 |
| இலங்கை புடவை மற்றும் ஆடை நிறுவனம் | 32 |
| வணிகப் பிரிவு | |
| வணிகத் திணைக்களம் | 34 |
| கம்பனிகள் பதிவாளர் திணைக்களம் | 36 |
| இலங்கைத் தேசிய புலமைச் சொத்துக் காரியாலயம் | 37 |
| இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை | 39 |
| **அமைச்சின் பொதுத் தகவல்கள்** | 44 |
| **நிதி முன்னனேற்றம்** | 47 |

# முன்னுரை

கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சின் 2012ஆம் ஆண்டிற்கான செயற்பாட்டு அறிக்கை 402ம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபத்தின் ஊடாக வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு அமைவாக தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையின் முதல் பகுதியில் அமைச்சின் கைத்தொழில் பிரிவின் கீழ் உள்ள நிறுவனங்கள் மற்றும் அலகுகள் என்பற்றின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் செயற்பாடுகள் பற்றிய விபரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. அமைச்சின் வணிகப் பிரிவின் கீழ் உள்ள நிறுவனங்களினால் செயற்படுத்தப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் செயற்பாடுகள் பற்றிய விபரங்கள் அறிக்கையின் இரண்டாம் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அமைச்சின் பொதுத் தகவல்கள் மற்றும் 2012ஆம் ஆண்டின் ஒன்றுதிரட்டிய நிதிச் செயற்பாடுகள் இறுதியில் விபரமாக குறிப்பிடப்பட்டுள்ளது.

# கைத்தொழில் பிரிவு

# கைத்தொழில் மற்றும் கொள்கை அபிவிருத்திப் பிரிவு

## அறிமுகம்

கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சின் பேரினக் கொள்கைப் பிாழவு கைத்தொழில் அபிவிருத்திக்காக தேசிய கொள்கைச் சட்டகத்திற்கு இசைவாக வர்த்தக மற்றும் தீர்வை வரிகள் தொடர்பாக கொள்கைகளை உருவாக்குவதற்கு பங்களிப்பினை வழங்குகின்றது.

## சர்வதேச வர்த்தகம் தொடர்பான பணிகள்

சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்கள் மூலம் ஏற்றுமதி சார்ந்த கைத்தொழிற்துறைக்கான ஏற்றுமதிச் வாய்ப்புகளை பெற்றுக்கொடுப்பதற்கு உதவுவதுடன், தேசிய கைத்தொழிற்சாலைகளைப் பாதுகாப்பதற்காக வணிகத் திணைக்களத்துடன் இணைந்து நடவடிக்கைகளை மேற்கொள்ளுகின்றது.

## தீர்வைகள் தொடர்பான பணிகள்

நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு, வணிகத் திணைக்களம், தீர்வைகள் மற்றும் முதலீட்டு கொள்கைகள் திணைக்களம், பொருளாதார அபிவிருத்திக்கான தேசிய சபை என்பவற்றுடன் இணைந்து பேரினக் கொள்கைப் பிரிவு தேசிய கைத்தொழிற்துறை எதிர்கொள்ளும் தீர்வைகள் தொடர்பான பிரச்சனைகளை தீர்த்துவைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுகின்றது.

## 2012 டிசம்பர் 31 வரையிலான முன்னேற்றங்கள்

**தேசிய கைத்தொழில் துறையின் முன்னேற்றத்திற்காக பேரின பொருளாதாரக் கொள்கைப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்**

கீழ்வரும் நடவடிக்கைகளை விதப்புரை செய்ததன் மூலம் கைத்தொழிற்சாலையாளர்களின் தீர்வைகள் தொடர்பான பிரச்சனைகளை தீர்ப்பதற்கு பேரினக் கொள்கைப் பிரிவு பங்களிப்பினை வழங்கியது.

- மூலப்பொருட்கள், இடைநிலைப் பொருட்கள் மற்றும் இயந்திரங்களின் தீர்வை வரிகள் மற்றும் செஸ் வரியினை விலக்களித்தல் அல்லது குறைத்தல்.
- தேசிய கைத்தொழிற்துறையினை பாதுகாப்பதற்கு பொருந்தும் வகையினாலன தீர்வை வரி மற்றும் செஸ் வரி விதிப்பினை மேற்கொள்ளல் அல்லது உயர்த்துதல் அல்லது மீள்திருத்தம் செய்தல்.
- உள்நாட்டு கைத்தொழிற்சாலையாளர்களுக்கு அவசியமான மூலப்பொருட்களுக்கு நிலவும் பற்றாக்குறையினை கவனத்தில்கொண்டு பெறுமதி சேர்ப்பு மேற்கொள்ளப்படாமல் மூலப்பொருள் வடிவில் ஏற்றுமதி மேற்கொள்வதை குறைப்பதற்கு அல்லது தடுப்பதற்காக ஏற்றுமதி செஸ் வரி அரசினால் அறிமுகப்படுத்தப்படுதல்.

## தேசிய கைத்தொழிலின் பெறுமதி சேர்த்தலை ஊக்குவித்தல்

30% வீதத்திற்கு மேற்பட்ட உள்ளூர் பெறுமதி சேர்த்தல்களை மேற்கொள்ளுகின்ற உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட அல்லது ஒன்றிணைக்கப்பட்ட மோட்டார் வாகனங்கள் மற்றும் மின்சார உபகரணங்கள் உற்பத்தி வரியில் இருந்து விலக்குப் பெறும்.

இதற்கு அவசியமான சிபாரிசுகளுடன், உரிய கணக்கீடு மேற்கொள்ளப்படும் அட்டவணை மற்றும் உற்பத்திக் கைத்தொழில் அவதானிப்பு மற்றும் அவசியமான வழிகாட்டல்கள் மேற்கொள்ளல் என்பன பேரினக் கொள்கைப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது. இதன்படி, உள்நாட்டு பெறுமதி சேர்பை மேற்கொண்ட வாகனங்களுக்கு 2008ஆம் ஆண்டு முதன் முதலாக வரி நிவாரணம் வழங்கப்பட்டதன் பின்னர் 2012ஆம் ஆண்டு இறுதியில், 07 நிறுவனங்கள் தேசிய ரீதியில் பெறுமதி சேர்க்கப்பட்ட வாகன ஒன்றிணைத்தலை மேற்கொள்வதுடன், 30% மேற்பட்ட உள்நாட்டு பெறுமதி சேர்த்தலை மேற்கொண்ட 4000ற்கும் மேற்பாட்ட வாகனங்களை தயாரித்துள்ளது.

இத்துடன், உள்நாட்டு தயாரிப்பு நிறுவனங்களினால் தேசிய பெறுமதி சேர்க்கப்பட்ட சலவை இயந்திரம், குளிரூட்டி மற்றும் போத்தல்களை குளிர்விக்கும் இயந்திரங்களை தயாரிக்கும் இரு நிறுவனங்களும் இந்த வரி நிவாரணத்தைப் பெற்றுக்கொள்கின்றன.

# பிரதேசக் கைத்தொழில் அபிவிருத்திப் பிரிவு

## அறிமுகம்

அபிவிருத்தி அடைந்த பிரதேசங்களுக்கு மட்டும் வரையறுக்கப்பட்டிருந்த கைத்தொழில் அபிவிருத்தியனை, பிரதேச மட்டத்தில் விரிவடையச் செய்வதற்கும், அதன் மூலம் தேசிய வருமானத்திற்கு கைத்தொழிற்துறையிலிருந்து வழங்கும் பங்களிப்பினை உயர்த்துவதற்கும் கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சின் பிரதேசக் கைத்தொழில் அபிவிருத்திப் பிரிவு தனது பங்களிப்பினை வழங்குகின்றது. இந்தப் பணியின் போது பிரதேச ரீதியில் கைத்தொழிற்துறை முதலீட்டினை ஊக்குவித்தல், அவசியமான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல் மற்றும் தொழில்நுட்ப வசதிகள் மற்றும் ஆலோசனைகளை வழங்குதல் என்பன இப்பிரிவின் பொறுப்பாக அமைந்துள்ளது.

## பிரதேச கைத்தொழில் சேவைகள் குழு

மேற்குறித்த நோக்கங்களை அடைவதற்காக 1990ஆம் ஆண்டு 46ஆம் ஆண்டு இலக்க கைத்தொழில் அபிவிருத்தி சட்டத்தின் கீழ் அனைத்து மாகாணங்களிலும் பிரதேச கைத்தொழில் சேவைக் குழு நிறுவப்பட்டுள்ளது. இந்த குழுவின் பணியாக அமைவது மாகாணத்தினுள் கைத்தொழில் அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கு அவசியமான திட்டங்கள் மற்றும் செயற்பாட்டுத் திட்டங்கள் என்பவற்றை தயாரித்தல், அதற்கு அவசியமான வசதிகளை வழங்குதல் மற்றும் கைத்தொழில் தொடர்பான முதலீட்டு தீர்மானங்களை செயற்படுத்துவதற்கு முதலீட்டாளர்களுக்கு உதவுதல் என்பவற்றைக் குறிப்பிட முடியும்.

## பிரதேச கைத்தொழில் பேட்டை

இந்தப் பிரிவின் மூலம் செயற்படுத்தப்படும் பிரதேச கைத்தொழில் பேட்டை நிகழ்ச்சித்திட்டம் மிக முக்கியமான நிகழ்ச்சித்திட்டம் ஆகும். இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் நிலம், மின்சாரம், நீர் போன்ற பொது வசதிகளுக்காக செலவழிக்கக்கூடிய முதலீடு குறைக்கப்படுகின்றது. இந்த நோக்கத்தினை அடைவதற்கு அமைச்சின் ஊடாக நாடுமுழுவதிலும் 26 கைத்தொழில் பேட்டைகள் 16 மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ளது.

## 2012.12.31ம் திகதியில் முன்னனேற்றம்

2012ஆம் ஆண்டு நிறைவடைகையில் மின்சாரம், நீர் மற்றும் பாதை போன்ற அவசியமான உட்கட்டமைப்பு வசதிகளுடன், 863.5 ஏக்கர் நிலம் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது. 277 கைத்தொழிற்சாலைகள் தங்கள் வணிக தயாரிப்புகளை மேற்கொள்வதுடன், மேலும் 48 கைத்தொழிற்சாலைகளின் நிர்மாணப் பணிகள் தொடர்கின்றன. இக்கைத்தொழிற்பேட்டைகள் மூலம் 15,182 தொழில்வாய்ப்புகள் உருவாகியுள்ளது.

2012ஆம் ஆண்டு, கைத்தொழில் பேட்டைகளில் காணிகளைப் பெற்றுக்கொள்வதற்காக, புதிய

கருத்திட்டங்களுக்காக 106 விண்ணப்பப்படிவங்கள் கிடைத்துள்ளதுடன், இவற்றில் 74 விண்ணப்பங்களுக்கு பிரதேச கைத்தொழில் சேவைக் குழுவின் ஒப்புதல் கிடைத்துள்ளது. இக்கருத்திட்டங்களில் 65 கருத்திட்டங்களுக்கு அமைச்சு மதிப்பீட்டுக் குழுவின் அனுமதி கிடைத்துள்ளது. அமைச்சரவை அனுமதிக்காக இவ்வருடம் 65 கருத்திட்டங்கள் சமர்ப்பிக்கப்பட்டு, அதற்கான அனுமதி பெறப்பட்டுள்ளதுடன், இவற்றிற்கான காணித்துண்டுகள் ஒதுக்கப்பட்டுள்ளது. 2012ஆம் ஆண்டினுள் 30 புதிய கைத்தொழிற்சாலைகள் தங்கள் வணிக தயாரிப்புகளை ஆரம்பித்துள்ளதுடன், இதன் மூலம் 2054 தொழில்வாய்ப்புகள் கிடைத்துள்ளது.

**மத்துகம கைத்தொழில் பேட்டை**

மத்துகம கைத்தொழில் பேட்டையின் முதலாம் கட்டம் பூர்த்திசெய்யப்பட்டுள்ளதுடன், மத்திய மற்றும் பாரிய அளவிலான கைத்தொழிற்சாலைகளுக்கான நிலத்துண்டுகள் ஒதுக்கப்பட்டுள்ளது.

அஸ்பெஸ்டஸ் கூரைத்தகடுகள் உற்பத்தி நிறுவனமொன்று வர்த்தக நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதுடன், ஏனைய இரு கைத்தொழிற்சாலைகள் கட்டுமானப் பணிகளை ஆரம்பித்துள்ளன.

இரண்டாம் II நிர்மாணப்பணிகளுக்காக BOQ அனுமதிக்காக பொறியியல் சேவை வீடு மற்றும் பொது வசதிகள் அமைச்சின் கீழ் அமைந்துள்ள தொழில்நுட்பக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

**திருகோணமலை கைத்தொழில் பேட்டை**

'கிழக்கின் உதயம்' நிகழ்ச்சித்திட்டத்துடன், திருகோணமலை கைத்தொழில் பேட்டையின் முதலாம் கட்டம் 25 ஏக்கரில் அபிவிருத்தி செய்யப்பட்டதுடன், இதற்காக 13 கைத்தொழிற்சாலைகள் தெரிவுசெய்யப்பட்டன. தற்போது 03 கைத்தொழிற்சாலைகள் 350 தொழிலாளர்களுடன் தங்கள் வணிகப் பணிகளை ஆரம்பித்துள்ளது. ஏனைய தேர்வு செய்யப்பட்ட கைத்தொழிற்சாலைகள் கட்டுமானப் பணிகளில் ஈடுபட்டுள்ளது.

இரண்டாம் கட்ட அபிவிருத்திப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், நில அபிவிருத்தி மற்றும் காரியாலய நிர்மாணிப்பு என்பவற்றிற்காக 2012ம் ஆண்டு ரூபா 27.13 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.

**மன்னார் கைத்தொழில் பேட்டை**

'வடக்கின் வசந்தம்' நிகழ்ச்சித்திட்டத்தோடு இணைந்ததாக மன்னாரில் முதவாது கைத்தொழிற் பேட்டை அபிவிருத்தி நிகழ்ச்சிகள், மன்னார் தீவில் 25 ஏக்கரில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

காணியினை துப்பரவாக்குதல் மற்றும் சமப்படுத்துதல் என்பற்றுமன் பாதுகாப்பு வேலி அமைத்தல் பணிகள் நிறைவடைந்துள்ளதுடன், உட்பாதைகள், கான்கள் அன்பற்றை அமைக்கும் பணிகள் 75மூ வீதம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. இதற்காக 2012ஆம் ஆண்டினுள் ரூபா ரூபா 26.24 மில்லயின் செலவிடப்பட்டுள்ளது. நீர் வழங்களுக்காக ரூபா 30.9 மில்லியன் செலவிடப்பட்டுள்ளதுடன், அதன் நிர்மாணிப் பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. உயர் அழுத்த (HT Line) மற்றும் தாழ் அழுத்த (LT Line) மின்சார வழங்களுக்காக

மின்சார சபையிடமிருந்து மதிப்பீடு கோரப்பட்டுள்ளது.

முதலீட்டு சபையினால் அனுமதிக்கப்பட்ட நவீன தொழில்நுட்பத்துடனான ஆடைக் கைத்தொழிற்சாலைகள் இரண்டிற்கு இவ்வருடம் அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளதுடன், இந்த கைத்தொழிற்சாலையின் நிர்மாணப் பணிகள் நிறைவு செய்யப்பட்டு சிறியளவில் வணிக தயாரிப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன் கீழ் 2500 தொழில்வாய்ப்புகள் உருவாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

**குருநாகல் கைத்தொழில் பேட்டை**

உள்நாட்டு ஔதடத்துறையினை ஊக்குவிப்பதற்காக, உயிரியல் விஞ்ஞானத்திற்கான கைத்தொழில் பேட்டையொன்றினை நிறுவுவதற்கு அமைச்சு தீர்மானித்துள்ளது. இதற்கு பொருத்தமான 48 ஏக்கர் நிலம் குருநாகலையில் கண்டறியப்பட்டுள்ளது.

மருத்துவ மற்றும் மருத்துவ உபகரணங்களை உற்பத்தி செய்வதற்காக, முன்மொழியப்பட்ட கைத்தொழிற்பேட்டையினை உருவாக்குதல் நோக்கமாக அமைந்துள்ளது. இதற்காக 2012ஆம் ஆண்டு ரூபா 0.084 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.

**வவுனியா கைத்தொழில் பேட்டை**

'வடக்கின் வசந்தம்' நிகழ்ச்சித் திட்டத்தோடு இணைந்து, இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நிறுவுவதற்கு தீர்மானிக்கப்பட்ட 03 கைத்தொழில் பேட்டைகளில், 02வது கைத்தொழில் பேட்டை வவுனியா கைத்தொழில் பேட்டையாகும்.

ஓமந்தையில் 24 ஏக்கரில் கைத்தொழில் பேட்டையினை நிறுவுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது. கைத்தொழிலுக்கான நீரினை நிலக்கீழ் நீரில் இருந்து பெற்றுக்கொள்வதற்கான சாத்தியக்கூறுகள் தொடர்பாக ஆராய்வதற்கு தேசிய நீர் விநியோக மற்றும் வடிகால் சபைக்கு வழங்கப்பட்டுள்ளது. இதற்காக ரூபா 2.12 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.

**உலப்பன கைத்தொழில் பேட்டை**

உலப்பனை கைத்தொழிற் பேட்டையின் உள்ளக பாதைகளை நிர்மாணிக்கும் பணிகள் நிறைவடைந்துள்ளதுடன், இங்கு மேலதிக ட்ரான்ஸ்போமரும் நிறுவப்பட்டுள்ளது. உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக்காக 2012ஆம் ஆண்டு ரூபா 3.2 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.

இந்தக் கைத்தொழிற்பேட்டைக்காக, இந்த வருடம் 4 கருத்திட்டங்களுக்கு அமைச்சரவை அனுமதி கிடைக்கப்பெற்றதுடன், இதில் இரண்டு கைத்தொழிற்சாலைகளின் நிர்மாணிப்பு பணிகள் தொடர்கின்றன.

**லக்சஉயன கைத்தொழில் பேட்டை**

லக்ச உயன கைத்தொழில் பேட்டையின் உள்ளகப் பாதைகளை புதுப்பிப்பதற்கான மதிப்பீடு கோரப்பட்டுள்ளது. அத்துடன், 2012ஆம் ஆண்டு கைத்தொழில் பேட்டையின் நீர் வடிகால் வசதிகளுக்காக ரூபா 0.6 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.

இவ்வருடம் 04 முதலீட்டாளர்களுக்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ளதுடன், இரு முதலீட்டாளர்கள் தங்கள் நிர்மாணிப்புப் பணிகளை நிறைவு செய்து வர்த்த தயாரிப்புகளை ஆரம்பித்துள்ளனர்,

### நவகம்புர கைத்தொழில் பேட்டை

நவகம்புர கைத்தொழில் பேட்டையின் வாயிற்கதவு, வேலி மற்றும் நிர்வாகக் காரியாலய நிர்மாணிப்பு பணிகள் கிழக்கு மாகாணக் கட்டடத் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ளதுடன், நிர்மாணிப்பு பணிகள் தொடர்கின்றன. இதற்காக இவ்வருடத்தினுள் ரூபா 4.9 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது. கைத்தொழில் பேட்டையின் உள்ளக பாதை அமைப்பு பணிகளுக்கான BOQ அனுமதிக்காக, அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாணிப்பு கூட்டுத்தாபனத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இத்துடன், கைத்தொழிற்சாலைகளுக்காக 3 கட்டடங்களை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதுடன், இதற்கான ஒப்பந்ததாரரை தேர்ந்தெடுப்பதற்கு விலைக்கேள்வி நடைமுறை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

### டெம்பல்பேர்க் கைத்தொழில் பேட்டை

2012ஆம் ஆண்டு கைத்தொழில் பேட்டையின் உள்ளக பாதை உட்பட வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 12.51 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது. இவ்வருடத்தினுள் முதலீட்டாளர் இருவருக்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளதுடன், இந்த முதலீட்டாளர்கள் 2012ஆம் ஆண்டினுள் தங்கள் வணிக தயாரிப்புகளை ஆரம்பித்துள்ளதுடன், இத்துடன் கைத்தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 09 ஆகும்.

### தங்கொட்டுவை கைத்தொழில்பேட்டை

தங்கொட்டுவை கைத்தொழில்பேட்டை நீர்வழங்கள் முறைமை நடவடிக்கைகள் வென்னப்புவ பிரதேச சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், இதற்காக ரூபா ஒரு மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.

### கலிகமுவ கைத்தொழில் பேட்டை

கலிகமுவ கைத்தொழில்பேட்டையின் உள்ளக பாதை முறைமையினை நிர்மாணிக்கும் பணிகளை ஆரம்பிப்பதற்கு அவசியமான ஆரம்ப நடவடிக்கைகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளதுடன், இதற்காக 2012ஆம் ஆண்டினுள் ரூபா 0.69 மில்லியன் செலவிடப்பட்டது.

இவ்வருடத்தினுள் 04 முதலீட்டாளர்களுக்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளதுடன், இதில் 03 முதலீட்டாளர்கள் வணிக நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர்.

### மாகந்துர (கிழக்கு) கைத்தொழில் பேட்டை

மாகந்துர கைத்தொழில் பேட்டையின் நீர் வழங்கல் வடிகால் அமைப்பு முறைமை நடவடிக்கைகள் வடமேல் மாகாண நீர்வழங்கல் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், இதன் நிர்மாணப் பணிகளில் 95மூ பூர்த்திசெய்யப்பட்டுள்ளது. இதற்காக ரூபா 8.73 மில்லியன் செலவிடப்பட்டது.

**மாத்தளை – நாலந்த கைத்தொழில் பேட்டை**

மாத்தளை (நாலந்த) கைத்தொழில் பேட்டையின் எல்லையில் மதிலை அமைப்பதற்கான ஒப்பந்ததாரரை தேர்ந்தெடுப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், கைத்தொழில்பேட்டையில் ரூபா 2.5 மில்லியன் செலவில் மேலதிக ட்ரான்ஸ்போமர் அமைக்கப்பட்டுள்ளது.

**மாத்தறை கைத்தொழில் பேட்டை**

மாத்தறை கைத்தொழில் பேட்டைக்கு நுழைவதற்கான பாதையின் மிகுதியை நிர்மாணிப்பதற்காக வடமேல் மாகாண பாதை அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து புதிய மதிப்பீடு கோரப்பட்டுள்ளதுடன், அபிவிருத்தி நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்காக ரூபா 12.73 மில்லியன் இவ்வருடத்தினுள் செலுத்தப்பட்டுள்ளது.

**கரந்தெனிய கைத்தொழில்பேட்டை**

கரந்தெனிண கைத்தொழில் பேட்டையின் பாதையோர விளக்குகளை புதுப்பிப்பதற்காக ரூபா 0. 16 மில்லியன் மின்சார சபைக்கு வழங்கப்பட்டுள்ளது.

**மாதம்பை கைத்தொழில்பேட்டை**

மாதம்பை கைத்தொழில்பேட்டையின் சூழல் தாக்கத்தை மதிப்பிடுவதற்கான அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதுடன், இந்தக் காணியினை அமைச்சிற்கு ஒப்படைப்பதற்கு முடியாது என காணி சீர்திருத்த ஆணைக்குழு அறிவித்துள்ளது.

# அமைச்சின் கீழ் செயற்படும் கைத்தொழில் பேட்டைகள்



# அபிவிருத்திப் பிரிவு - I

## அறிமுகம்

இலங்கையில் மேற்கொள்ளப்படும் கைத்தொழில்களில் இலங்கையின் பொருளாதாரத்திற்கு பலமூட்டும் கைத்தொழிற்த்துறைகளைக் கண்டறிந்து, அவற்றினை அபிவிருத்தி செய்வதற்காக அமைச்சினுள் மூன்று அபிவிருத்திப் பிரிவுகள் நிறுவப்பட்டுள்ளன. அவற்றில் அபிவிருத்திப் பிரிவு-1, விவசாய உற்பத்தி சார்ந்த கைத்தொழிற்த்துறையினை மேம்படுத்துவதற்காக நிறுவப்பட்டதாகும்.

இதன் கீழ் உள்ள கைத்தொழிற்துறைகளாக பெறுமதி சேர்க்கப்பட்ட தேயிலை, பெறுமதி சேர்க்கப்பட்ட தும்பு சார்ந்த உற்பத்திகள், பதனிடப்பட்ட உணவுகள், பொதி செய்யும் பொருட்கள், மற்றும் வாசனைத் திரவியங்கள் அமைந்துள்ளன.

## 2012 டிசம்பர் 31ஆம் திகதியில் முன்னேற்றம்

### பதனிடப்பட்டஉணவு

தேசிய போசணை மாசத்தினை இலக்காகக் கொண்டு பதனிட்ட உணவு கைத்தொழிற்துறைக்கு உணவுத் தயாரிப்பில் சுகாதாரப் பாதுகாப்புத் தன்மை, உணவின் பல்வகைத்தன்மை மற்றும் புதியதலைமுறை உணவு, இளைய தலைமுறையினரின் உணவுப் பழக்கங்களின் மாற்றம் மற்றும் உலகமயமாக்கல் தொடர்பாக அறிவூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களும் கருத்தரங்குகளும் நடாத்தப்பட்டது.

வருடாந்தம் நடாத்தப்படும் பதனிட்ட உணவு மற்றும் பொதியிடல் தொடர்பான சர்வதேசக் கண்காட்சி இவ்வருடம் 11வது முறையாக வெற்றிகரமாக 2012ஆம் ஆண்டு ஜூலை மாதம் 11ம் திகதி நடாத்தப்பட்டது. இதற்கு இதில் சீனா, இந்தியா, பாகிஸ்தான், தாய்லாந்து போன்ற வெளிநாடுகளில் இருந்தும், உள்நாட்டு பிரதான உணவு மற்றும் பொதியிடல் துறைகளைச் சேர்ந்த 252 கைத்தொழிற்சாலையாளர்களும் பங்குபற்றினர்.

பதனிட்ட உணவுகள் பிரிவுக்கான நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை ஒழுங்குபடுத்தலின் கீழ் போசணை மாதத்தில் உரிய கைத்தொழிற்சாலையாளர்களை அறிவூட்டும் விசேட நிகழ்ச்சித்திட்டங்கள் சில ஒழுங்குபடுத்தப்பட்டது.

பெறுமதி சேர்க்கப்பட்ட ஏற்றுமதிகளை மேற்கொள்பவற்களுக்கு வழங்கப்படும் தீர்வை வரிச் சலுகை திட்டத்தின் (TIEP) கீழ் பதனிடப்பட்ட உணவு தயாரிக்கும் 110 கைத்தொழிற்சாலைகளுக்கு, அவர்களின் ஏற்றுமதியினை ஊக்குவிப்பதற்காக வரிவசதிகள் வழங்கப்பட்டது.

## செயற்பாடுகள்

### தேயிலைக் கைத்தொழில்துறை

தேயிலைக்கு பெறுமதி சேர்த்தல் மேற்கொள்ளப்படுவது பொதியிடல் மற்றும் சுவையூட்டிகள், பழத்துண்டுகள் சேர்த்தல் போன்ற முறைகளிலாகும். கைத்தொழிற்துறைக்கு அவசியமான இந்தப் பொருட்கள், இயந்திரங்கள் மற்றும் தொழில்நுட்பம் என்பவற்றை வரியில்லாமல் இறக்குமதி செய்வதற்கு வழிவகை செய்வதன் மூலம் இக்கைத்தொழிற்துறை ஊக்குவிக்கப்படுகின்றது. இந்த வருடம் புதிதாக 05 கைத்தொழிற்சாலைகளுக்கு இவ்வசதிகள் வழங்கப்பட்டதுடன், மொத்தமாக 171 கைத்தொழிற்சாலைகள் இவ்வசதியைப் பெற்றுக்கொள்கின்றன.

### தும்பு கைத்தொழிற்துறை

தும்பு சார்ந்த கைத்தொழிற்துறையின் செயற்திறனையும், தரத்தினையும் மேம்படுத்த குறைந்த செலவில் உயர் தரத்தினையுடைய கயிறினை நெய்யும் இயந்திரத்தினை உற்பத்தி செய்வதற்கு மொரட்டுவை பல்கலைக்கழக இயந்திர பொறியியல் துறைக்கு அமைச்சானது தனது பங்களிப்பினை வழங்கியது.

## பொதியிடல் துறை

பொதியிடல் கைத்தொழிற்துறையைச் சார்ந்தவர்களின் தொழில்நுட்பத் திறனை அதிகரிப்பதற்கும், புதிய தொழில்நுட்ப அறிவினைப் பெற்றுக் கொடுப்பதற்கும், அவர்களுக்கு பயிற்சி நெறியொன்றும், சான்றிதழ் நெறியொன்றும் நடாத்தப்பட்டது. அமைச்சின் பங்களிப்புடன், பிரதேசக் கைத்தொழில் வர்த்தக சபையின் ஊடாக உணவு உற்பத்தியாளர்களுக்கு பல நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டது.

பொதியிடல் துறையில் உள்ளவர்களுக்கு புதிய தொழில்நுட்ப முறைகளை அறிமுகப்படுத்துவதற்கும் அனைத்து உள்நாட்டு கைத்தொழிலாளர்களின் உற்பத்தி இயலளவினை கண்காட்சிப்படுத்துவதற்காக 'லங்கா பக் - 2012' சர்வதேசக் கண்காட்சி ஒழுங்குசெய்யப்பட்டது. இதில் உள்நாடு மற்றும் வெளிநாடுகளைச் சேர்ந்த 150 கைத்தொழிலாளர்கள் பங்குபற்றினர். அத்தோடு இந்தக் கண்காட்சியின் ஊடாக பொதியிடல் கைத்தொழிற்துறையில் தங்கியுள்ளோருக்கு இயந்திரங்களை வழங்குவோர், மூலப்பொருட்களை வழங்குவோர், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தை வாய்ப்புகள் பற்றிய தகவல்களை பரிமாறிக்கொள்வதற்கு வாய்ப்பினை வழங்கியது.

தொழில்நுட்ப வசதிகள் மற்றும் ஏனைய தகவல்களை பெற்றுக்கொள்வதற்கு முடியாத பிரதேசங்களைச் சேர்ந்த கைத்தொழிற்சாலையாளர்களுக்கு பொதியிடல் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் அப்பிரதேசங்களில் ஒழுங்கு செய்யப்பட்டது.

## தரச் சான்றிதழைப் பெற்றுக்கொடுத்தல்

சர்வதேச தரச் சான்றிதழைப் பெற்றுக்கொடுக்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் உணவுப் பாதுகாப்பு தொடர்பாக HACCP, ISO 22000, GMP மற்றும் SLS போன்ற சர்வதேச தரச் சான்றிதழைப் பெற்றுக்கொள்வதற்காக 20 கைத்தொழிற்சாலைகள் அனுப்பப்பட்டன.

## உணவுப் பாதுகாப்பு

உணவுப் பாதுகாப்பு தொடர்பாக சான்றிதழைப் பெற்றுக்கொடுக்கும் நிகழ்ச்சித்திட்டத்தினை தொடர்ந்தும் செயற்படுத்தல் மற்றும் இந்த நிகழ்ச்சித்திட்டத்தில் ஏனைய தொடர்புபடும் துறைகளான பொதியிடல், உணவுக் களஞ்சியப்படுத்தல், போக்குவரத்து செய்தல் மற்றும் உணவுடன் தொடர்புபடும் நிறுவனங்கள் தொடர்பாக அறிமுகப்படுத்தும் நடவடிக்கைகள் ஒழுங்குபடுத்தப்பட்டது.

## ஏற்றுமதியினை ஊக்குவித்தல்

ஏற்றுமதியினை ஊக்குவிப்பதற்காக தீர்வை வரி நிவாரணத்தை வழங்கு நிகழ்ச்சித்திட்டத்தின் (TIEP) கீழ் 506 கைத்தொழிற்சாலைகள் நன்மைகளைப் பெறுகின்றன.

## கைத்தொழில் பிரிவின் ஏற்றுமதி முன்னேற்றம்




*மூலம்: அபிவிருத்திப் பிரிவு 1*

# அபிவிருத்திப் பிரிவு - II

## அறிமுகம்

தேசிய கைத்தொழில் பிரிவை வலுவூட்டுவதற்கு அவசியமான வசதிவாய்ப்புகளை அளிப்பதன் மூலம் உயர்தரமுள்ள பொருட்களை உற்பத்திசெய்து அதனூடாக சர்வதேச சந்தையினை வெற்றிகொள்ளச் செய்வதே இப்பிரிவின் பிரதான பணியாகும்.

இப்பிரிவின் கீழ் செயற்படும் கைத்தொழிற்துறைகளாக அச்சு மற்றும் வார்ப்புக் கைத்தொழில், இறப்பர் சம்பந்தமான கைத்தொழில், உலோக அடிப்படைப் பொருட்கள் மற்றும் பொறிகள் கைத்தொழில், படகு கட்டுமானக் கைத்தொழில், மோட்டார் வாகனத் தயாரிப்பு மற்றும் போக்குவரத்து உபகரணங்கள் தயாரிப்புக் கைத்தொழில், மரம் மற்றும் மரம் சார்ந்த கைத்தொழில், பிளாஸ்டிக் சார்ந்த கைத்தொழில், இரசாயனப் பொருட்கள் சார்ந்த கைத்தொழில் மற்றும் புகைப்படத் தயாரிப்பு கைத்தொழில் போன்வைகளாகும்.

## 2012 டிசம்பர் 31ம் திகதியில் முன்னேற்றம்

### அச்சு மற்றும் வார்ப்புக் கைத்தொழில்

அச்சு மற்றும் அச்சு வார்ப்பு வசதியளிப்பு நிலையத்தின் இரண்டாம் கட்டப்பணிகள் நிறைவடைந்துள்ளது. இதற்கு அமைச்சு ரூபா 85 மில்லியனை வழங்கியதுடன், மொரட்டுவைப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து தனியார் துறையினர் ரூபா 30 மில்லியனை வழங்கினர். தற்போது, இந்நிலையம் வெற்றிகரமாக இயங்குவதுடன், பல்கலைக்கழக மாணவர்களுக்கு பிரயோகப் பயிற்சியும், கைத்தொழிற்துறையாளர்களுக்கு சேவைகளும் வழங்கப்படுகின்றது. இதன் மூலம் 140 சேவை வழங்கல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் 90 நபர்களுக்கு பயிற்சியும் வழங்கப்பட்டுள்ளது.

## இறப்பர் தயாரிப்பு

பிரதான ஏற்றுமதிப் பொருள்களில் இறப்பரும் ஒன்றாவதுடன், சர்வதேசத்தில் தனக்கென சிறப்பான ஒரு இடத்தினையும் பெற்றுள்ளது. இறப்பர் சார்ந்த பொருட்கள் ஏனைய உற்பத்தித்துறைகளோடு ஒப்பிடுகையில் அதிகூடிய பெறுமதி சேர்கையினை சேர்க்கத்தக்க பொருளாகும். அதனால் அமைச்சு கொள்கை வகுப்பாளர் இலகுவாக தரவுகளைப் பெற்றுக்கொள்வதற்காக இறப்பர் சார்ந்த உற்பத்தித்துறைக்கான தரவு வங்கியொன்றை நிறுவுவதற்கு அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இறப்பர் தயாரிப்பு பிரிவுக்கான தரவு வங்கியினை நிறுவுவதற்கு EML Consultants நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### படகு மற்றும் படகு கட்டுமான கைத்தொழிற்துறை

இலங்கையில் படகு கட்டுதல் மற்றும் திருத்துதலை பிரபல்யப்படுத்துவதற்காக, 120 உள்நாட்டு மற்றும் வெளிநாட்டினரின் பங்குபற்றலுடன், சிறிமாவோ பண்டாரநாயக்க ஞாபகார்த்த கண்காட்சி மண்டபத்தில் 2012 மே மாதம் 18 – 20ம் திகதி வரை ‘ Boat Show’ படகு உற்பத்தியாளர்களின் சங்கத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டு மிகச் சிறப்பாக நடைபெற்றது.

### மூங்கில் சார்ந்த உற்பத்திகள்

இலங்கையின் காலநிலைக்குப் பொருத்தமான மூங்கில் வளர்ப்பினை பிரபல்யப்படுத்துவதற்கு ஐக்கிய நாடுகளின் கைத்தொழில் அபிவிருந்தி நிறுவனத்துடன் (UNIDO) இணைந்து, நடவடிக்கை எடுத்துள்ளது. தற்சமயம், பெருந்தோட்டக் கைத்தொழிற்துறை அமைச்சின் ஒத்துழைப்போடு, மூங்கில் வளர்ப்புக்கு உகந்த நிலங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளது. அத்தோடு முதலீட்டாளர்கள் சுயமாக மூங்கில் வளர்ப்பினை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. அதேசமயம், ஒரு தனியார் கைத்தொழிற்துறை நிறுவனம் மூங்கில் சார்ந்த உற்பத்திகளை ஆரம்பித்துள்ளது.

### இயந்திர உபகரணங்கள் உற்பத்தித் துறை

இலங்கை கைத்தொழில் மற்றும் வணிக சபையுடன் இணைந்து ஏழாவது தடவையாகவும் “இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் வர்த்தகக் கண்காட்சி” பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்ணடபத்தில் 2012 ஒகஸ்ட் 24 -26ம் திகதி வரை நடத்தப்பட்டது. இதில் ஏறத்தாள 160 உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கண்காட்சியாளர்கள் பங்குபற்றினர். இதில் உணவுப் பதப்படுத்தல் தொடர்பான இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள், புடைவைத் தயாரிப்பு சார்ந்த உபகரணங்கள், மீன்பிடிப்பு சார்ந்த உபகரணங்கள், போக்குவரத்து சார்ந்த உபகரணங்கள் காட்சிப்படுத்தப்பட்டன.

கைத்தொழில் அபிவிருத்திக்கு நவீன தொழில்நுட்பத்தினை அறிமுகப்படுத்தல், புதிய முதலீட்டு வாய்ப்புகளுக்கான துறைகளை அறிமுகப்படுத்துதல், கிராமப் பகுதியில் உள்ள சிறிய மற்றும் மத்தியளவான தொழில்முயற்சியாளர்களை ஊக்கப்படுத்துதல் என்பன இக்கண்காட்சியின் நோக்கமாகும்.

### இலகு பொறியியல் கைத்தொழில் பிரிவு

பாரம்பரிய இரும்பு மற்றும் வார்ப்பிரும்பு உற்பத்திக் கைத்தொழிலை மேம்படுத்துவதற்காக கம்பஹா மாவட்டத்தில் மகர பிரதேசச் செயலகப் பிரிவில் வாபொட கிராமத்தினை மையப்படுத்தி பாரம்பரிய கைத்தொழில் பற்றிய ஆராய்ச்சி அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

# அபிவிருத்திப் பிரிவு - III

## அறிமுகம்

சர்வதேச சந்தையில் போட்டியிடுவதற்கு வல்லமையுள்ள தரத்தில் உயர்ந்த பொருட்களை உற்பத்தி செய்வதற்கு பாதணி, தோல் பொருட்கள், மட்பாண்டப் பொருட்கள், மின் மற்றும் மின்னிலத்திரனியல் உபகரணங்கள், ஔதடம் மற்றும் அழகுசாதன பொருட்கள், வர்ணப்பூச்சு மற்றும் அச்சுத்துறைகள் போன்றவற்றிற்கு ஊக்குவிப்புகளையும், வசதிகளையும் வழங்குவதற்கான நடவடிக்கைகள் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

## 2012 டிசம்பர் 31ம் திகதி முன்னேற்றம்

### தோல் பொருட்கள் கைத்தொழிற்துறை

தோற்பொருட் கைத்தொழிற்துறைக்கு அவசியமான பதப்படுத்தப்பட்ட தோலினை இறக்குமதி செய்யும் போது விதிக்கப்படும் வரியினை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபையுடன் இணைந்து அமைச்சு சர்வதேச மட்டத்திலான தோல் மற்றும் பாதணிக் கண்காட்சிகளை 2007ம் ஆண்டிலிருந்து நடத்தி வருவதுடன், நான்காவது ஆண்டாக 2012 பெப்பரவாரி மாதம் நடத்தப்பட்டது அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் மூலம் கைத்தொழிலாளர்களுக்கு புதிய சந்தைவாய்ப்புகளும், புதிய வடிவமைப்புகளும் கிடைப்பதற்கான சந்தர்ப்பங்கள் உருவாகியது. இக்கண்காட்சியில் 200 மேற்பட்டவர்கள் பங்குபற்றினர்.

பாதணி மற்றும் தோல்பொருட்கள் தயாரிப்பு பயிற்சிப் பாடசாலையொன்றினை நிறுவுவதற்கு அவசியமான வழங்கல் நடவடிக்கைகள் முடிவடைந்துள்ளதுடன், குறுகிய கால பாடநெறி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.




*மூலம்: அபிவிருத்திப் பிரிவு 3*

### மட்பாண்ட கைத்தொழில்

புந்துக் களிமண் மற்றும் கனியப் படிவுகளை கண்டறிவதற்கு 197 இடங்களில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், இதில் 27 இடங்கள் கண்டறியப்பட்டுள்ளது. கனிய தாதுக்களை கண்டறிவதற்கான ஆய்வுகளை புவியியல் மற்றும் சுரங்க காரியாலயத்துடன் இணைந்து அமைச்சானது நிறைவுசெய்துள்ளது.

### மின் மற்றும் மின்னிலத்திரனியல் கைத்தொழில்துறை

மின் மற்றும் மின்னிலத்திரனியல் கைத்தொழிலாளர்களுக்காக முன்வடிவமைப்பு வசதிகளை வழங்கும் மத்தியநிலையமொன்று மொரட்டுவைப் பல்கலைக்கழகத்தினுள் நிறுவப்பட்டுள்ளது.

புதிய வடிவமைப்புகளை சமர்ப்பித்த 10 மாணவர்களுக்கு தொழில்நுட்ப உபகரணங்களை வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டள்ளது.

மின் மற்றும் மின்னிலத்திரனியல் கைத்தொழிற்துறையில் இருக்கும் சிறிய வளர்ந்து வரும் கைத்தொழிலாளர்கள் மற்றும் புதிய உற்பத்தியாளர்கள் என்போருக்கு தொழில்நுட்ப வசதிகளை வழங்கும் மத்தியநிலையமொன்றினை மொரட்டுவைப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து, அப்பல்கலைகழகத்தினுள் நிறுவுவப்பட்டுள்ளது.

*மூலம்: அபிவிருத்திப் பிரிவு 3*

**ஔதட /மருந்து உற்பத்தித்துறை**

மேற்குறிப்பிட்ட தேவையில் சிறியளவான உற்பத்தியை மட்டுமே 10 பெரியளவிலான நிறுவனங்கள் மேற்கொள்ளுகின்றன.

ஔதடத்துறையில் இருக்கும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்கள் 200 வரையில் உள்ளதுடன், அவற்றில் பத்து பெரிய நிறுவனங்கள் மட்டுமே அதில் பங்களிப்பு செய்கின்றது.

ஔதட ஆராய்ச்சிக்காக கொழும்பு பல்கலைக்கழகத்தில் ஔதட ஆராய்ச்சி மத்தியநிலையம் நிறுவுப்பட்டுள்ளதுடன், இதன் இரண்டாம் கட்ட நடவடிக்கைகளை செயற்படுத்துவதற்கான உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

ஔதட தயாரிப்புத்துறையின் திறனை விருத்திசெய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது.




*மூலம்: அபிவிருத்திப் பிரிவு 3*

# கைத்தொழில் பதிவு மற்றும் தகவல் முகாமைத்துவப் பிரிவு

## அறிமுகம்

இப்பிரிவின் பிரதான பணி, 1990ம் ஆண்டு 46ம் இலக்க கைத்தொழில் முன்னேற்றச் சட்டதிற்கு ஏற்ப உற்பத்தித் தொழிற்சாலைகளை கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சின் கீழ் பதிவு செய்தல் ஆகும். அத்தோடு இப்பிரிவு, பதிவு செய்த கைத்தொழிற்சாலைகளின் தகவல்களை அடிப்படையக் கொண்டு தரவுத்தளம் ஒன்றினைப் பேணுவதாகும்.

அத்துடன், வாடிக்கையாளர்கள் மற்றும் பொது மக்கள் இத்தகவல்களை பெற்றுக்கொள்வதற்காக அமைச்சின் இணையத்தளமான www.industry.gov.lk ல் வெப்தள தரவுகளாக உள்ளடக்கப்பட்டுள்ளது.

அத்தோடு இவ்வாறு சேகரிக்கப்பட்ட தரவுகள் கைத்தொழில் பதிவு மற்றும் தகவல் முகாமைத்துவப் பிரிவினால் பகுப்பாய்வு செய்யப்பட்டதன் பின்னர் கொள்கை தயாரிப்பாளர்கள், ஆராய்சியாளர்கள், கல்வியாளர்கள் மற்றும் மாணவர்கள் போன்ற வெளிவாரி நபர்களுக்கும், அமைச்சின் உள்ளக நிர்வாக நடவடிக்கைகளுக்கும் தேவைக்கேற்ப தகவல்கள் வழங்குகின்றது. மேலும் இப்பிரிவு தேசிய மட்டத்தில் கைத்தொழிற்துறையின் செயலாற்றுகையினை, ஏனைய துறைகளுடன் ஒப்பிடுவதற்காக இலக்க மற்றும் வரைபு வடிவிலான தகவல்களை பரந்தளவிலான தரவுத் தளமொன்றையும் பேணுகின்றது.

## 2012 டிசம்பர் 31 ம் திகதி வரையிலான முன்னேற்றம்

### கைத்தொழிற்துறை சார்ந்த தகவல் தரவுத்தளம்

### பதிவுசெய்யப்பட்ட கைத்தொழில் சார்ந்த தரவுத்தளம்

இத்தரவுத்தளம், கைத்தொழில் முயற்சியாளர்கள் தமது நிறுவனத்தினை பதிவு செய்வதற்காக வழங்கும் விண்ணப்பத்தில் அடங்கியுள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. இதில் கைத்தொழிற்ச்சாலைகளின் அமைவு, உரிமை, உற்பத்தி செய்யப்படும் பொருள், உற்பத்தியின் கொள்ளளவு மற்றும் பெறுமதி, நிலையான சொத்துக்களின் விபரம், ஊழியர்களின் எண்ணிக்கை போன்ற விபரங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

### வலையமைப்பு வசதிகள்

### அ) உள்ளக கணணி வலையமைப்பு (LAN)

அமைச்சினுள் நிறுவப்பட்டுள்ள உள்ளக கணணி வலையமைப்பினை பேணுவதுடன் பாவனையாளர் வளங்களை பகிர்ந்துகொள்ள, இணைய வசதிகளை பெற்றுக்கொள்ள வசதிகளை வழங்குதல். மற்றும் அமைச்சினுள் உள்ள 50 கணணிகளை உள்ளடக்கிய உள்ளக கணணி (Host Computer) வலையமைப்பு (LAN) பேணப்படுவதுடன், ADSL இணைப்பு மூலம் இணையத்தளத்தினை உபயோகிப்பதற்கான வாயப்பு வழங்கப்படுகின்றது. அண்மையில் வை – ∴பை (Wi-Fi) முறைமையினை அமைச்சினுள் நிறுவியதன் மூலம் ஊழியர்களும், வாடிக்கையாளர்களும் வை – ∴பை (Wi-Fi) சார்ந்த தொகுதியகளை உபயோகிக்க முடியும். இது நாளாந்த வேலைகளை கம்பிகள் ஊடான இணைப்பினை போலல்லாது இலகுவாக மேற்கொள்ள உதவும்.

அமைச்சின் தேவைகளுக்கும் மற்றும் ஏனைய உசாத் துணைகளுக்குமாக கைத்தொழில் தொடர்பான புதிய புத்தகங்கள், சஞ்சிகைகள், வெளியீடுகள் என்பன நூலகத்திற்காக கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

அத்தோடு பயனாளிகள் தங்களுக்கு தேவையான புத்தகங்களையும், மாதச் சஞ்சிகைகளையும் சுலபமாக தேர்ந்தெடுக்கத்தக்க வகையில் நூலகம் மீளொழுங்கு செய்யப்பட்டுள்ளது.

**கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட்ட தொழிற்படும் கைத்தொழில் உற்பத்தி நிறுவனங்கள் -2012**

| | பிரிவு | நிறுவனங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | 31. உணவு, குடி பானம் மற்றும் புகையிலை | 07 |
| 2 | 32. துணி, ஆடைகள் மற்றும் தோற்பொருட்கள் | 07 |
| 3 | 33. மரம், மரம் சார்ந்த பொருட்கள் | 00 |
| 4 | 34. கடதாசி மற்றும் கடதாசிப் பொருட்கள் | 06 |
| 5 | 35. இரசாயன, பெற்றோலியம், இறப்பர், பிளாஸ்டிக் பொருட்கள் | 07 |
| 6 | 36. உலோகம் அல்லாத பொருட்கள் மற்றும் கனியப் பொருட்கள் | 04 |
| 7 | 37. உலோக அடிப்படைப் பொருட்கள் | 01 |
| 8 | 38. உலோக நிர்மாணப் பொருட்கள் | 08 |
| 9 | 39. ஏனையவை | 02 |
| | **மொத்தம்** | **42** |

மூலம்: கைத்தொழில் பதிவு மற்றும் தகவல் முகாமைத்துவப் பிரிவு

## வெப்தள அபிவிருத்தி

அமைச்சின் வெப்தளம் வெப் 2 தரத்துடன் முற்று முழுதாக மீளமைப்பு செய்யப்பட்டது. இதன் மூலம் திறந்த வரிசையூடாக (on line) விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் வசதி, தற்போதுள்ள தகவல்களில் மாற்றங்கள் காணப்படின் அதனை திறந்த வரிசையூடாக (on line) அறிவிப்பதற்கான வசதி, வெப் தளத்தில் உள்ள தரவுகளை தங்கள் தேவைக்கேற்ப பல்வேறு விதமான தரவுக் களங்களை தேர்ந்தெடுத்து தேவையான புள்ளிவிபர அறிக்கைகளை பெற்றுக்கொள்வதற்கான போன்ற வசதிகள் கிடைத்துள்ளன.

**2012.12.31ம் திகதியில் பதிவுசெய்த கைத்தொழிற்சாலைகளின் பிரதேசப் பரம்பல்**

| மாவட்டம் | கைத்தொழிற்சாலைகள் |
|---|---|
| கொழும்பு | 1272 |
| கம்பஹா | 349 |
| களுத்துறை | 107 |
| காலி | 37 |
| புத்தளம் | 38 |
| கண்டி | 78 |
| குருநாகல் | 35 |
| மாத்தறை | 39 |
| ஹம்பாந்தோட்டை | 15 |
| நுவரேலியா | 6 |
| இரத்தினபுரி | 12 |
| அனுராதபுரம் | 9 |
| பதுளை | 7 |
| கேகாலை | 15 |
| மாத்தளை | 14 |
| மொனராகரலை | 2 |
| பொலனறுவை | 3 |
| அம்பாறை | 4 |
| திருகோணமலை | 3 |
| மட்டக்களப்பு | - |
| வவுனியா | - |
| யாழ்ப்பாணம் | 2 |
| மன்னார் | 1 |
| **மொத்தம்** | **2048** |

மூலம்: கைத்தொழில் பதிவு மற்றும் தகவல் முகாமைத்துவப் பிரிவு

# உற்பத்தித்திறன் மேம்படுத்தல் பிரிவு

## அறிமுகம்

சர்வதேசச் சந்தையின் போட்டிநிலைமைகளுக்கு முகம்கொடுக்க கூடிய வகையில், இலங்கையின் கைத்தொழிற்துறையின் உற்பத்தித்திறன் மற்றும் தரத்தினை மேம்படுத்துவதற்கு அவசியமான சூழலை உருவாக்குவதற்கான வசதிகளை வழங்குதல் இந்த அலகின் பணியாக அமைகின்றது.

## 2012 டிசம்பர் 31ம் திகதியில் முன்னேற்றம்

**கைத்தொழிற்துறையில் வலுச்சக்திப் பாவனையின் செயற்திறனை அதிகரிப்பதற்கான நிகழ்ச்சித்திட்டம்.**

- வழிகாட்டல் குழு நிறுவப்பட்டுள்ளது.
- 27 கைத்தொழில் நிறுவனங்களின் ஆரம்ப வலுப்பாவனைத் தரவுகள் மற்றும் தகவல்களைப் பெற்று மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- தேர்ந்தெடுக்கப்பட்ட 15 நிறுவனங்களின் 30 முகாமையாளர்களுக்கான அறிவூட்டல் நிகழ்ச்சித்திட்டம் செயற்படுத்தப்பட்டது.
- இந்த அமைச்சின் வலுச்சக்தி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தில் பங்குபெறும் 14 நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.
- வலுச்சக்தி ஆலோசகர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட 15 நிறுவனங்களில் ஆரம்ப வலுச்சக்தி ஆய்வினை நிறைவு செய்துள்ளனர்.
- வலுச்சக்தி ஆலோசகர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட 7 நிறுவனங்களில் ஆரம்ப வலுச்சக்தி ஆய்வ அறிக்கையினை நிறைவு செய்துள்ளனர்.

**இலங்கையில் உள்ள கைத்தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறும் கழிவுகளை முகாமைத்துவத்தினை ஒழுங்கமைத்தல் மற்றும் கைத்தொழில் கழிவுகளில் இருந்து இடையீட்டுப் பொருட்களை உற்பத்தி செய்தலை அதிகரித்தல்**

இந்நிகழ்ச்சித்திட்டம் வடமேல், வடமேற்கு, தெற்கு மற்றும் மத்திய மாகாணங்களில் செயற்படுத்தப்படுவதுடன், அதன் மூலம் நிறைவு செய்யப்பட்ட பணிகள் :

- மாகாணசபை நிறுவனங்கள், மாநகர சபை, நகர சபை, பிரதேச சபை, வர்த்தக சம்மேளனம், உற்பத்தியாளர்களின் அமைப்பு என்பவற்க்கிடையிலான தொடர்புகள் கட்டியெழுப்பப்பட்டுள்ளது.
- கைத்தொழில் உற்பத்தி நிறுவனங்களை தொடர்புபடுத்துவதன் மூலம் தரவு மற்றும் தகவல் வலையமைப்பொன்று கட்டியெழுப்பப்பட்டுள்ளது.
- மத்திய சுற்றாடல் அதிகாரசபை, தேசிய சுத்திமிகு உற்பத்தி மத்தியநிலையம், கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம், கைத்தொழில் அபிவிருத்திச் சபை, ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் வன மற்றும் சுற்றாடல் விஞ்ஞானப் பிரிவு, கொழும்பு மாநகர சபை மற்றும் கைத்தொழில் மற்றும் வர்த்தக சம்மேளம் என்பவற்றினை உள்ளடக்கிய வழிகாட்டுதல் குழுக்கள் / ஆலோசனைச் சபைகளை நிறுவுதல்.
- கைத்தொழிலாளர்களுக்கான அறிவூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களை செயற்ப்படுத்துதல்.
- உரிய செயற்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளது.

**கொங்கிறீட் மற்றும் சீமெந்து சார்ந்த உற்பத்திகளின் தரத்தினை மேம்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டம்.**

- கொங்கிறீட் மற்றும் சீமெந்து சார்ந்த உற்பத்திகளில் ஈடுபட்டுள்ள 40 உற்பத்தியளர்களின் தரவு மற்றும் தகவல்கள் சேகரிக்கப்பட்டுள்ளது.
- கொங்கிறீட் மற்றும் சீமெந்து சார்ந்த உற்பத்தித்துறைக்கு இலங்கை தர நியம நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்டுள்ள தர நியமம் அறிமுகப்படுத்தப்பட்டது.
- இலங்கைத் தர நிறுவனம், அரச பொறியியலாளர் கூட்டுத்தாபனம், தேசிய பொறியியலாளர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மத்தியநிலையம், மற்றும் கட்டுமானப் பயிற்சி வழங்கல் மற்றும் அபிவிருத்தி நிறுவனம் போன்றவற்றினை தொடர்புடுத்துவதன் மூலம் கொங்கிறீட் மற்றும் சீமெந்து சார்ந்த உற்பத்தித்துறையினை மேம்படுத்தக்கூடிய நிகழ்ச்சித்திட்டங்களைத் தயாரித்தல். (தேசிய பொறியியலாளர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மத்தியநிலையம் தற்போது அது மாதிரியான நிகழ்ச்சித்திட்டமொன்றினை தயாரித்துள்ளது)

# இரசாயன ஆயுத உடன்படிக்கையை அமுல்படுத்துவதற்கான தேசிய அதிகாரசபை

**அறிமுகம்**

இரசாயன ஆயுதங்களை விருத்தி செய்தல், உற்பத்தி செய்தல், களஞ்சியப்படுத்தல், உபயோகித்தல் என்பவற்றோடு அதனால் ஏற்படும் அழிவுகளையும் தடை செய்வதற்காக உருவாக்கப்பட்ட சர்வதேச உடன்படிக்கையே இரசாயன ஆயுத உடன்படிக்கை ஆகும். இது 1993ல் பாரிய அழிவுகளை ஏற்படுத்தும் எல்லா வகையான ஆயுதங்களையும் முற்றாகத் தடை செய்வதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட உடன்படிக்கை ஆகும். ஏனைய உடன்படிக்கைகள் போல் அல்லாது இத்தடை செய்யும் நடவடிக்கைகளானது உரிய முறையில் மேற்கொள்ளப்படுகினவா என்பதை உறுதி செய்வதற்குரிய பரந்தளவான செயலமைப்பினை தன்னகத்தே கொண்டு இது ஏனைய உடன்படிக்கைகளில் இருந்து வேறுபடுகின்றது.. 1994 ஒகஸ்ட் 19 திகதி தொடக்கம் இலங்கையினுள் செல்லுபடியாகுமாறு 2007ஆம் ஆண்டு 58ம் இலக்க இரசாயன ஆயுத உடன்படிக்கையானது 2008 ஒகஸ்ட் 15ம் திகதி தொடக்கம் அமைச்சரினால் அமுல்படுத்தப்பட்டது.

இரசாயன ஆயுத உடன்படிக்கையினை செயற்படுத்தும் தேசிய அதிகாரசபையானது, உடன்படிக்கைக்கு உரிய தேசிய அமுலாக்கத்தின் செயற்பணிகளினை மேற்கொள்வதற்காக நெதர்லாந்தில் அமைந்துள்ள இரசாயன ஆயுதங்களைத் தடைசெய்யும் அமைப்புடனும் மற்றும் ஏனைய அங்கத்தவ அரசுகளுடன் தொடர்புகளைப் பேணுவதற்காகவும் கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சின் கீழ் நிறுவப்பட்ட அமைப்பாகும்.

**2012 டிசம்பர் 31ம் திகதி வரையிலான முன்னேற்றம்**

**கைத்தொழிலுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கல்**

இரசாயனப் பொருட்களினை ஏற்றுமதி / இறக்குமதி செய்யும் எட்டு நபர்கள் தேசிய அதிகாரசபையின் கீழ் புதிதாக பதிவுசெய்துள்ளதுடன், எட்டுக் கைத்தொழில்கள் புதிதாக பதிவுசெய்யப்பட்டுள்ளது. இலங்கையினுள் அட்டவணைப்படுத்தப்பட்ட இரசாயனப் பொருட்களை இறக்குமதி செய்யும் 30 நபர்களுக்கு இரசாயனப் பொருட்களினை இறக்குமதி செய்வதற்கான அனுமதிப் பத்திரம் தேசிய அதிகார சபையினால் வழங்கப்பட்டுள்ளது. கைத்தொழிற்சாலைகளினால் கோரப்படும் விண்ணப்பத்திற்கு, இரசாயன ஆயுத உடன்படிக்கைச் சட்டத்தின் கீழ் இறக்குமதியாளர்களுக்கு அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்படும்.

**தேசிய பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டம்**

இரசாயன ஆயுதத் தாக்குதல் அல்லது இரசாயனப் பொருள் பாவனை என்பனவற்றின் போது ஏற்படும் அனர்த்தங்களின் போது முதல் செயற்படுபவராக செயற்படுவதற்கான தேசிய பாதுகாப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் நடாத்தப்பட்டது இதன் கீழ் இலங்கை இராணுவம், இலங்கை பொலிஸ், தீயணைப்பு படை, வைத்திய தொழிலில் தேர்ச்சிபெற்றவர்கள் என்பவர்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. முதல் செயற்படுவோருக்கான (First Responders) இறுதிப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் வெள்ளவத்தை தீ மற்றும் பாதுகாப்பு பாடசாலையில் 2012 ஏப்பிரல் 2 – 6 ம் திகதி வரை நடத்தப்பட்டது.

தேசிய அதிகாரசபையினால் இரசாயனப் பொருட்களினால் ஏற்படுத் அனர்த்தகங்களை முகாமைத்துவம் செய்வதற்கான வைத்திய நிபுணர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் தேசிய வைத்தியசாலையில் நடாத்தப்பட்டது. இந்நிகழ்ச்சிக்கு வெவ்வேறு வைத்தியசாலைகளைச் சேர்ந்த 32 வைத்தியர்கள் பங்குபற்றினர்.

இரசாயன ஆயுதங்களைத் தடைசெய்யும் அமைப்பு மற்றும் சேர்பியா, பின்லாந்து, மற்றும் தென் கொரியா போன்ற நாடுகளுடன் இணைந்து ஒழுங்கு செய்யப்பட்ட இரசாயனப் பொருட்களினால் ஏற்படும் அனர்த்தங்களின் போது பாதுகாப்பினை வழங்குவதற்கும் மற்றும் உதவிகளை வழங்குவதற்குமான சர்வதேச பயிற்சி, முதல் செயற்படுவோருக்கான குழுவில் இருக்கும் இலங்கை இராணுவத்தினைச் சேர்நத இருவருக்கும், விமானப்படையைச் சேர்ந்த ஒருவருக்கும் வழங்கப்பட்டது.

அவசரகால முகாமைத்துவ திட்டத்தினை தயாரிப்பதற்கான அறிமுகத்துடன், இரசாயன அவசரகால முகாமைத்துவம் தொடர்பான விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டம் களுத்துறை கைத்தொழில் பேட்டையைச் சேர்ந்த கைத்தொழிலாள்ளகளுக்காக 2012 மே 29ம் திகதி நடாத்தப்பட்டது.

கைத்தொழில் ஆய்வு நடவடிக்கைகள் 2012 ஜூன் 24ம் திகதி ஆரம்பிக்கப்பட்டதுடன், இக்கைத்தொழில் பேட்டையில் உள்ள இருபத்தி மூன்று கைத்தொழிற்சாலைகள் ஆய்வு செய்யப்பட்டது.

## இரசாயன பொருட்களினால் ஏற்படும் திடீர் அனர்த்தங்களின் போது ஒத்துழைப்பினை வழங்குதல்

2012 மே 15ம் திகதி ரமடா ஹொட்டலில் நடைபெற்ற பொஸ்பேன் வாயுக் கசிவின் போது, தேசிய அதிகார சபை அங்குள்ள மாதிரிகளைப் பெற்றுக்கொள்வதிலும், ஆய்வுகளை மேற்கொள்வதிலும் உதவியதுடன், இலங்கைப் பொலிஸ் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கமைய, தேசிய அதிகார சபையின் ஊழியர்கள் அரசாங்கப் பகுப்பாய்வுத் திணைக்களத்திற்கு பெற்றுக்கொண்ட மாதிரிகளை பகுப்பாய்வு செய்வதற்கு உதவினர்.

2012 ஏப்பிரல் 12ம் திகதி களுத்துறைக் கைத்தொழில் பேட்டையில் உள்ள இரசாயனக் கைத்தொழிற்சாலையில் இடம் பெற்ற குளோரின் வாயுக் கசிவு தொடாபான விசாரணைகளுக்கு தேசிய அதிகார சபை தனது தொழில்நுட்ப மற்றும் நிபுணத்தவ சேவையினை வழங்கியது. இறுதி விசாரணை அறிக்கையில், பாதுகாப்பு மற்று அபாயமின்மை என்பவற்றினை மேம்படுத்துவதற்காக, 2012 ஜூன் 16ம் திகதி வெளிவாரி வளங்கள் மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சுக்கு கையளிக்கப்பட்டது.

## ஆசிய வலய அங்கத்தவ நாடுகளில் உள்ள தேசிய அதிகார சபைகளின் பத்தாவது வலய மகாநாடு

இலங்கை அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் ஆசிய வலயத்தில் உள்ள அங்கத்துவ நாடுகளின் தேசிய அதிகார சபைகளின் பத்தாவது மகாநாடு இரசாயன ஆயுதங்களைத் தடைசெய்தல் அமைப்பின் தலைமையின் கீழ் கொழும்பில் உள்ள தாஜ் சமுத்திரா ஹொட்டலில் 2012 ஜூன் 26 -28 ம் திகதி வரை நடைபெற்றது. ஆசிய பசுபிக் போன்ற 29 நாடுகளைச் சேர்ந்த 40 பிரதிநிதிகள் மற்றும் ரசாயன ஆயுதங்களைத் தடைசெய்தல் அமைப்பின் 6 பிரதிநிதிகள் இதில் பங்குபற்றினர்.

கௌரவ கைததொழில் மற்றும் வணிக அமைச்சரின் அழைப்பின் பேரில் இரசாயன ஆயுதங்களைத் தடைசெய்தல் அமைப்பின் பணிப்பாளர் நாயகம், அதிமேதகு அஹமட் உசுமுகு பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

## அபாயமான இரசாயனப் பொருட்களைக் கையாளுதல் மற்றும் அதன் பாதுகாப்பு தொடர்பான பயிற்சி

தேசிய அதிகார சபையினால் துறைமுக மற்றும் விமான சேவைகள் தகவல் மற்றும் ஆராய்ச்சி தனியார் நிறுவனத்தின் பங்களிப்புடன், துறைமுக அதிகார சபையின் 'மகாபொல கேட்போர்கூடத்தில்' அபாயமான இரசாயனப் பொருட்களைக் கையாளுதல் மற்றும் அதன் பாதுகாப்பு தொடர்பான பயிற்சி நெறியொன்று 2012 செப்டெம்பர் 12ம் திகதி நிகழ்த்தப்பட்டது.

இரசாயனக் கைத்தொழிற்துறையின் நிலைத்திருப்பிற்காக அபாயமான இரசாயனப் பொருட்களை உபயோகித்தல் , சுகாதாரம், ஊழியர்களின் பாதுகாப்பு மற்றும் அபாயமின்மை தொடர்பாக சான்றிதழ் பாடநெறியொன்றினை 26ம் திகதி செப்டெம்பர் 2012இல் கொழும்பு பல்கலைக்கழகத்தின் மனித வள மேமன்மை நிறுவனத்துடன் இணைந்து நடாத்தியது

# கூட்டுத்தாபனம் மற்றும் சட்டபூர்வசபைகள் பிரிவு

## அறிமுகம்

கூட்டுத்தாபனம் மற்றும் சட்டபூர்வசபைகள் பிரிவு, கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சின் கீழ் செயற்படும் அனைத்து கூட்டுத்தாபனங்களையும் சட்டபூர்வசபைகளையும் மேலும் வலுவூட்டி நிரந்தர நிறுவனமாக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுகின்றது. இந்நோக்கத்தினை பூாத்திசெய்வதற்காக இப்பிரிவினால் அரச நிறுவனங்கள் அனைத்தினதும் வளங்களின் செயற்திறனை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதன் மூலம் வருமானத்தினை உச்சமாக்குதல், தந்திரோபாய வியாபாரத்திட்டங்களை அறிமுகப்படுத்துவதன் மூலம் வியாபாரச் செயற்பாட்டினை விரிவுபடுத்தும் முறையினை அறிமுகப்படுத்துதல் என்பன ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அத்தோடு இப்பிரிவினால் இச்சட்டபூர்வ சபைகளின் நித்திய செயற்பாடுகளை தொடர்புபடுத்தல் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றது.

கீழ்வரும் கூட்டுத்தாபனங்களும் மற்றும் சட்டபூர்வசபைகளும் கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சின் மேற்பார்வையின் கீழ் செயற்படுகின்றன.

- வரையறுக்கப்பட்ட மாந்தை உப்புக் கம்பனி
- வரையறுக்கப்பட்ட கஹட்டகஹ காரீயக் கம்பனி
- இலங்கை புடவை மற்றும் ஆடை நிறுவனம்
- தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை
- லங்கா லேலண்ட் கம்பனி
- இலங்கை அசோக் லேலண்ட் கம்பனி
- சிறிய மற்றும் நுண்பாகக் கைத்தொழிற்சாலைத் தலைவர் மற்றும் தொழில்முயற்சியாளர் ஊக்குவிப்புக் கருத்திட்டம்

### வரையறுக்கப்பட்ட மாந்தை உப்புக் கம்பனி

மாந்தை உப்புக் கம்பனி திறைசேரியினை தனிப் பங்குரிமையாளராகக் கொண்ட ஒரு வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனி ஆகும். இக்கம்பனி உப்பு உற்பத்தி மற்றும் வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ளுகின்றது. தற்போது, மன்னார் மாவட்டத்தில் அமைந்துள்ள மன்னார் உப்பளம், யாழ்ப்பாண மாவட்டத்தில அமைந்துள்ள செம்மணி உப்gsk என்பவற்றினை இயக்குகின்றது. அமைச்சின் சிபாரிசுக்கு அமைவாக ரூபா 25 மில்லியன் திறைசேரியினால் மன்னார் உப்பளத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு வழங்கப்படடு அபிவிருத்திப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

### வரையறுக்கப்பட்ட கஹட்டகஹ காரீயக் கம்பனி

வரையறுக்கப்பட்ட கஹட்டகஹ காரீயக் கம்பனி ஒரு முற்று முழுதான அரசாங்கத்திற்கு சொந்தமான கம்பனியாகும்.. இது இலங்கையில் 2000 அடி ஆழத்தில் இருந்து காரியத்தினை அகழ்ந்தெடுக்கும் மிகப் பெரிய நிறுவனமாகும். அத்தோடு 2007இல் பணிகள் ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து ரூபா 452 மில்லியனை வருமானமாகப் பெற்றுள்ளது.˙.

### இலங்கை புடவை மற்றும் ஆடைகள் நிறுவனம்

துணிக் கைத்தொழில் பயிற்சி நிறுவனம் மற்றும் புடவை பயிற்சி மற்றும் சேவைகள் நிலையம் என்பவை 24 வருடங்களாக இக்கைத்தொழிலுக்கு சேவைகளை வழங்கியதுடன், 2009. ஜுன் 15ம் திகதியில் இருந்து 2009ஆம் ஆண்டு 12ஆம் இலக்க சட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்ட கஹட்டகஹ காரீயக் கம்பனி இலங்கை புடவை மற்றும் ஆடைகள் நிறுவனமாக தொழிற்படத் தொடங்கியது.

இந்த இரு நிறுவனங்களையும் இணைத்ததன் நோக்கம், மனித வளம், உபகரணம் மற்றும் இடம் என்பவற்றினை வினைத்திறனுடனும், உற்பத்தித்திறனுடனும் பயன்படுத்துதல் ஆகும். இந்நிறுவனத்தின் பிரதான குறிக்ககோளாக அமைவது, புடவைக் கைத்தொழிலோடு சார்ந்த நபர்களை பயிற்றுவித்தல் மற்றும் ஆடை உற்பத்தித்துறைக்கு அவசியமான பரிசோதனைகள் மற்றும் ஆலோசனைச் சேவைகளை வழங்குதல் ஆகும்.

### தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை

இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களின் பங்களிப்பு மிக முக்கியமானது என அடையாம் காணப்பட்டதுடன், நாட்டில் அமைந்துள்ள சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சித்துறையினை மேம்படுத்தல் உதவுதல், ஊக்குவித்தல், மற்றும் வசதிகயை வழங்குதல் என்பவற்றிற்காக தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை 2006ஆம் ஆண்டு 17ஆம் இலக்கச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டது.

### வரையறுக்கப்பட்ட லங்கா லேலண்ட் கம்பனி

வரையறுக்கப்பட்ட லங்கா லேலண்ட் கம்பனி 2008ஆம் ஆண்டில் இருந்து கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சின் கீழ் அமைந்த அரசுக்கு 100 வீதம் சொந்தமான வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனி ஆகும். வரையறுக்கப்பட்ட லங்கா லேலண்ட் கம்பனி திரவத்தன்மை அடைந்ததினால், அதனை மூடுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளதுடன், அரசாங்கத்தினால் முதலீடு செய்யப்பட்ட 42 வீதத்தினை முகாமைத்துவம் செய்வதன்றி, எவ்வித தொழிற்பாட்டு நடவடிக்கைகளையும் மேற்கொள்வதில்லை.

## சிறிய மற்றும் நுண்பாகக் கைத்தொழிற்சாலைத் தலைவர் மற்றும் தொழில்முயற்சியாளர் ஊக்குவிப்புக் கருத்திட்டம் 111 – (SMILE III)

### முகவுரை

சிறிய மற்றும் நுண்பாகக் கைத்தொழிற்சாலைத் தலைவர் மற்றும் தொழில்முயற்சியாளர் ஊக்குவிப்புக் கருத்திட்டம் 111 – ( SMILE III) இன் மூலம் வழங்கப்படும் கடன்களின் மீளப்பெறுதல்கள் மற்றும் வட்டியில் இருந்து உருவாக்கப்பட்ட சிறிய மற்றம் நுண்பாகக் கைத்தொழிற்சாலைத் தலைவர் மற்றும் தொழில்முயற்சியாளர் ஊக்குவிப்புக் கருத்திட்டம் 111 – சுழற்ச்சி நிதியம், கீழ்வரும் நோக்கங்களுடன் 2012 மே மாதம் 1ம் திகதியில் இருந்து நடைமுறைப்படுத்துவதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

- சிறிய மற்றம் நுண்பாகத் தொழில்முயற்சியாளர்கள், பொருளாதார ரீதியில் அல்லது நிதியியல் ரீதியில் புதிய கருத்திட்டங்களை ஆரம்பிப்பதற்கு அல்லது விரிவுபடுத்துவதற்கு நிதியுதவிகளை வழங்குதல்.
- சிறிய மற்றம் நுண்பாகத் தொழில்முயற்சியாளர்களின் முகாமைத்துவ, கணக்கியல் மற்றும் தொழில்நுட்ப திறன்களை அபிவிருத்தி செய்வதற்கு மூலதனத்தினை வழங்குதல்.
- இடைநிலை நிதி நிறுவனங்களின் இயலளவினைப் பலப்படுத்துதல்

புதிய தொழில்முயற்களை தொடங்குவதற்கு, அவற்களின் உற்பத்தித்திறனை அல்லது உற்பத்தியினை அதிகரிப்பதற்கு, உற்பத்திப் பொருட்களின் தரத்தினை அதிகரிப்பதற்கு குறைந்த வட்டி வீதத்தில் கடன்களை வழங்குவதற்கு SMILE III சுழற்ச்சி நிதியம், உருவாக்கப்பட்டுள்ளது. அத்தோடு இக்கடன்திட்டம், நிறுவனத்தின் இயலளவினையும், உற்பத்தித்திறக் அபிவிருத்தினையும் சிறிய மற்றம் நுண்பாகத் தொழில்முயற்சியாளர்கள் மேற்கொள்வதற்கும் உதவும்.

# கஹடகஹ கிறபைட் லங்கா பிறைவேட் லிமிடெட்

## அறிமுகம்

இலங்கையில் வடமேல் மாகாணத்தில் உள்ள மாதுராகொட, தொடங்கஸ்லாந்தை எனும் இடத்தில் கஹட்டகஹ காரீயச் சுரங்கம் அமைந்துள்ளது. இது கொழும்பு நகரத்தில் இருந்து 90 கிலோமீற்றர் தூரத்தில் அமைந்துள்ளதுடனடிபள , கைத்தொழில மற்றும் வணிக அமைச்சின் கீழ் உள்ள கஹட்டகஹ காரீயக் கம்பனியினால் நிர்வகிக்கப்படுகின்றது. இது 2007ஆம் ஆண்டு 07ம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட பூரண அரச நிறுவனமாகும். பிரதான பங்குதாரர் திறைசேரியாகும். நிதிக் கொள்கைகள் தொடர்பான தீர்மானங்கள் அமைச்சினூடாக திறைசேரியின் நிர்வாக கொள்கை பணிப்பாளர் சபையினால் எடுக்கப்படும்.

## 2012 டிசம்பர் 31ம் திகதியில் முன்னேற்றம்.

### உற்பத்தி

2012 ஆம் ஆண்டினுள் மொத்த காரீய உற்பத்தி (அகழும் காரீயம் ) 963.6 மெற்றிக் தொன் ஆகும். 2007 ஆம் ஆண்டிலிருந்து அகழ்வு புத்துயிர் பெற்றதன் பின்னர் இன்று வரை மொத்த உற்பத்தி 4,350 மெற்றிக் தொன் ஆகும்.

2012 ஏப்பிரல் மாதத்திலிருந்து மாதாந்தம் 80 மெற்றிக் தொன் என இலக்கு பூர்த்திசெய்யப்பட்டது.

கடந்த 10 ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் தலைக்கான மாதாந்த உற்பத்தி 0.138 மில்.தொன் முதல் 1.466 மெற்றிக் தொன் வரை அதிகரித்திருந்தது.

### வருமானம்

2000 ஆம் ஆண்டின் பின்னர் 2011 ஆம் ஆண்டில் கிறபெக்சல் கம்பனியுடனான தொடர்புடன் நாம் ஐக்கிய இராச்சியத்தில் ஐரேப்பிய சந்தைக்குள் நுழைந்திருந்தோம் என்பதுடன், உயர் தர காரீயம் ஐரோப்பிய சந்தைக்குள் ஏற்றுமதி செய்யப்பட்டது.

இதன்படி, கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடெட் 2012ம் ஆண்டில் 588.3மில்லியன் தொன் வரை ஏற்றுமதி செய்துள்ளது. அகழ்வு புத்துயிர் பெற்றதன் பின்னர் 2007 ஆம் ஆண்டிலிருந்து 2012 ஓகஸ்ட் வரையான மொத்தத் தொன் 3272.4 மில்லியன் தொன் ஆகும். உயர் தர காரீயத்தின் விற்பனை காரணமாக எமது விற்பனை வருமானம் 2010/2011 மற்றும் 2011/12 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அதிகரித்திருந்தது.

2012 ஆம் ஆண்டினுள் மொத்த வருமானம் 45.0 மில்லியன் ரூபாவாகும். அகழ்வுகளை மீள் ஆரம்பித்ததன் பின்னர் கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடெட் 2007 ஆம் ஆண்டிலிருந்து 2012 வரை 472.5 மில்லியன் ரூபாவை சம்பாதித்திருந்தது.

2012ம் ஆண்டு இறுதியில் 50.0 மில்லியன் ரூபா பெறுமதியான ஐக்கிய நாடுகள் டொலர் நிலையான வைப்பினை கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடெட் கொண்டுள்ளது.
2012 இறுதியில் கிடைக்கப் பெறுகின்ற தற்போதைய கையிருப்புகள 1690 மில்லியன்தொன் என்பதுடன், அதன் சந்தைப் பெறுமதி 358.6 மில்லியன் ரூபாவாகும்.

## அபிவிருத்தி நடவடிக்கைகள்

2003 ஆம் ஆண்டிலிருந்து 2012 ஆம் ஆண்டு வரை அடித்தள மட்டங்கள் 565 அடியிலிருந்து படிப்படியாக 2000 அடி ஆழமான சுரங்கம் புனர்நிருமாணம் செய்யப்பட்டது.

2011/2012 ஆம் ஆண்டில் 1845′ முதல் 1935′ வரையான மட்டம் புனர்நிருமாணம் செய்யப்பட்டதுடன், மாதாந்த உற்பத்தி 80 மில்.தொன் முதல் 88 மில்.தொன் வரை அதிகரித்துள்ளது.

தற்போது, புனர்நிருமாண வேலைத்திட்டம் அபிவிருத்தி வேலைத்திட்டம் உள்ளடங்கலாக 2000′ மட்டம் வரை செய்யப்பட்டுள்ளது.

ஏறுகின்ற பாதை மார்க்கம் 1845′மட்டம் மற்றும் 2000′ மட்டம் நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன், புனர்நிருமாணம் செய்யப்பட்டுள்ளது.

பொதியிடல் முறைமை, ஜம்போ பைகளை அறிமுகப்படுத்துவதையும், பொறிமுறைமை அலகினை நிறுவுவதனையும் மேம்படுத்தியுள்ளது. தூளாக்குகின்ற ஆலையின் கழிவினைக் குறைப்பதனை எதிர்பார்த்து அதனைப் பயன்படுத்துவதனைக் குறைப்பதற்கும், காரீயத்தின் செலவினைக் குறைப்பதற்கும் கைவிடப்பட்டிருந்த பொறியியல் ஆலை மீள ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

# வரையறுக்கப்பட்ட மாந்தை உப்புக் கம்பனி

### அறிமுகம்

மாந்தை உப்புக் கம்பனி, இலங்கை வரலாற்றில் நீண்ட காலமாக உப்பு உற்பத்தில் ஈடுபட்டு வருகின்றது. இங்கு சாதாரண கறியுப்பு, அயடீன் கலந்த உப்பு அரைத்த உப்பு, கைத்தொழில் பாவனைக்குரிய உப்புக்களை இலங்கையில் விநியோகித்து வருகின்றது.

1938ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட உப்பு உற்பத்தித் திணைக்களம் 2001ஆம் ஆண்டு தொடக்கம் வரையறுக்கப்பட்ட மாந்தை உப்புக் கம்பனியாக செயற்படுகின்றது.

### மன்னார் உப்பளம்.

மன்னார் உப்பளத்தின் பரப்பளவு 240 ஏக்கர் ஆகும். இதில் 2010ம் ஆண்டு வரை 110 ஏக்கரில் உப்பு உற்பத்தி நடைபெற்றது. 2011ம் ஆண்டு 53 ஏக்கர் பரப்பளவுகொண்ட பகுதி அபிவிருத்தி செய்யப்பட்டு இன்று 163 ஏக்கர் பகுதியில் உப்பு உற்பத்தி செய்யச் கூடியதாகவுள்ளது. அபிவிருத்திக்கு முன் சராசரியாக 4000 மெற்றிக்தொன் உப்பு உற்பத்தி செய்யப்பட்டது. இவ் உற்பத்தியில் இலங்கையின் மொத்த உற்பத்தியில் 2.6% ஆகும். இந்த 2.6% வீதம் 2012ல் 5% மாக உயர்வடைந்தது.

### 2012 டிசம்பர் 31ம் திகதியில் முன்னேற்றம்

53 ஏக்கர் உப்பு உற்பத்திக்காக அபிவிருத்தி நடவடிக்கைகளின் முன்னேற்றம் 98% ஆகும். அபிவிருத்திக்காக திறைசேரியினால் 25 மில்லியன் ரூபாயில் 24.95 மில்லியன் ரூபாய் செலவு செய்யப்பட்டு இக்கட்டம் பூர்த்திசெய்யப்பட்டது. 2012ஆம் ஆண்டு பின்வரும் பணிகள் நிறைவடைந்தது.

- 53 ஏக்கர் உப்பு உற்பத்திக்காக அபிவிருத்தி செய்யப்பட்டது
- உப்பு உற்பதிக்காக 04 உப்பு பழிங்காக்கல் பாத்திகள் உருவாக்கப்பட்டது
- உப்பு பழிங்காக்கல் பாத்திகளை சுற்றி கருங்கற்கள் அடுக்கப்பட்டமை
- நீர் இறைக்கும் மின்சார இயந்திரங்கள் 02 கொள்வனவு செய்யப்பட்டது
- அதிகூடிய சக்தி கொண்ட மின்மாற்றி உப்பளத்தில் பொருத்தப்பட்டது
- 40 மெற்றிக் தொன் உப்பு நிறுக்கக் கூடிய பாலம் தராசு அமைக்கப்பட்டது

களப்பில் இருந்து பெற்றுக்கொள்வதற்காக ஆழத்தில்பொருத்தக்கூடிய 02 பம்பிகள் கொள்வனவு செய்யப்பட்டது.

# தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை

## அறிமுகம்

இலங்கையினுள் சிறிய மற்றும் மத்திய அளவிலான தொழில் முயற்சிகளை அபிவிருத்தி செய்வதற்காக ஊக்குவிப்பினை வழங்கி, அவற்றினை மேம்படுத்துவதன் மூலம் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி மற்றும் அபிவிருத்தி என்பவற்றை உறுதிப்படுத்தல் அதிகாரசபையின் பணியாகும்.

## 2012 டிசம்பர் 31ஆம் திகதியில் முன்னேற்றம்

### தேசிய தொழில் முயற்சிப் பேரவை

தேசிய மட்டத்தில் கண்டறியப்பட்ட பிரச்சனைகள் மற்றும் தீர்க்கப்படாத கீழ் மட்டப் பிரச்சனைகள் இங்கு ஆராயப்படும். இது தொடர்பாக 11 கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டது

### மாவட்ட தொழில்முயற்சி மன்றம்

தொழில் முயற்சியாளர்களுக்கு அவசியமான வியாபார அபிவிருத்திச் சேவைகளை வழங்குவதற்காக, மாவட்ட தொழில்முயற்சி மன்றங்கள் தாபிக்கப்பட்டுள்ளது.

2012ஆம் ஆண்டு கிளிநொச்சி, இரத்தினபுரி, கேகாலை மாவட்டங்களில் மாவட்ட தொழில்முயற்சி மன்றங்கள் தாபிக்கப்பட்டது. அத்தோடு, பதுளை, மாத்தளை, கண்டி, அனுராதபுரம், மன்னார் மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் வியாபாரக் கூட்டங்கள் நடாத்தப்பட்டது.

### சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிக் கையேடு

2009ஆம் ஆண்டு தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகார சபை சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கான கையேட்டினை அறிமுகம் செய்தது. அத்தோடு இது 2012 ஆண்டில் மும் மொழிகளில் மீள் நோக்கு செய்யப்பட்டது.

2012 முதலாம் காலாண்டில், தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகார சபை, தேசிய மட்டத்திலான வழிகாட்டுதல் கையேடுகளை வெளியிடும் நிகழ்வுகளைப் கொழும்பு, மாத்தளை, அனுராதபுரம், இரத்தினபுரி, பதுளை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் நடாத்தியது.

### தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகார சபையின் வெப்தளம்

வெப்தளம், அதன் இயலளவினை அதிகரித்து, தரத்தினை மேம்படுத்தி, தகவல்களை இலகுவாகப் பெற்றுக்கொள்ளக் கூடியவாறு மீள் கட்டமைப்பு செய்யப்பட்டது.

### கிராமத்திற்கு பொருத்தமான நிகழ்ச்சித்திட்டம்

இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 130 பயனாளிகளுக்கு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. அத்தோடு, தேர்ந்தெடுக்கப்பட்ட 119 பயனாளிகளுக்கு ரூபா 50000.00 வீதம் நிதியுதவி வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அலங்கால மலர்க் கண்காட்சியும் நடைபெற்றது.

### வியாபாரத்தின் தொழில் நுட்ப மேம்படுத்தல்கள்

நிறுவனத்தினை ஆய்வுசெய்வதற்கும், அபிவிருத்தி செய்வதற்குமான களப் பயணங்களயோடு, தொழில்நுட்ப மாற்றல் நிகழ்ச்சித்திட்டங்கள் வடிவமைக்கப்பட்டு அமுல்படுத்தப்படும். இதன்கீழ், தொழில்நுட்ப இயல்ளவு அபிவிருத்தி, புதிய உற்பத்தி முறையினை அறிமுகப்படுத்தல், புதிய இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றின் அறிமுகம், பண்ட அபிவிருத்தி மற்றும் ஊக்குவிப்பு, உற்பத்தித்திறன்

மற்றும் தரமெம்படுத்தல்கள் என்பவற்றிற்கு முன்னுரிமை வழங்கப்படும்.

கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்துடன் இணைந்து ஒமேகா 3 முட்டைகளை உருவாக்கும் தொழில்நுட்பத்தை, தேர்ந்தெடுக்கப்பட்ட மத்திய தர தொழில்முயற்சியாளருக்கு வழங்குவதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**‘திரியடசவிய’**

‘திரியடசவிய’ தொழில்முயற்சியாளர்களை அறிவூட்டும் தொலைக்காட்சி நிறுவனத்தின் கீழ் 06 தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் ஒளிபரப்பு செய்யப்பட்டது.

**‘பட்டதாரி தொழில்முயற்சி உதயம்’ நிகழ்சித்திட்டம்**

வயம்ப பல்கலைக்கழகத்தின் 26 பட்டதாரிகளுக்கு தொழில்முயற்சியாளர் பயிற்சி வழங்கப்பட்டதுடன், நிதியுதவியினை வழங்குவதற்து 5பேர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

**ஏற்றுமதி சார் பொருட்களை தயாரிக்கும் கருத்திட்டம் (ஊதுபத்தி நிகழ்ச்சித்திட்டம்)**

தேசிய ஊாதுபத்தி தயாரிப்போர் சங்கம் நிறுவப்பட்டுள்ளது. பதுளை மாவட்டத்தில் புதிய ஊாதுபத்தி உற்பத்தியாளர்கள் 28 பேரை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், அனுராதபுர மாவட்டத்தில் 20 நபர்களுக்கு தொழில்நுட்ப பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

# புடவைக் கைத்தொழில் அபிவிருத்திப் பிரிவு

**அறிமுகம்**

கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சின், புடவைக் கைத்தொழில் அபிவிருத்திப் பிரிவின் நோக்கெல்லையாக பின்வரும் துறைகள் அமைந்துள்ளன.

- கைத்தறிப் புடவைக்கைத்தொழில்
- மின்வலுப் புடவைக்கைத்தொழில்
- ஆடைக் கைத்தொழில்

**2012ஆம்டிசம்பர் 31ம் திகதியில் முன்னேற்றம்.**

**கைத்தறிநெசவுக்கைத்தொழில்**

கைத்தறிப் புடவைக் கைத்தொழிலில் நிலையான அபிவிருத்தியை அடைவதற்காக, இலக்குக் குழுவின் சிபாரின் பேரில் கீழ்வரும் நிகழ்ச்சித்திட்டங்கள் 2012ஆம் ஆண்டினுள் செயற்படுத்தப்பட்டது.

- **முடம்பல்லகைத்தறிப் புடவைக் கைத்தொழில் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்**

இந் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்படும் வடிவமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தில் பங்குபற்றி பயிற்சியைப் பூர்த்திசெய்த 65 கைத்தறி கைத்தொழிலாளர்களுக்கு நெசவுத்தறிகளை வழங்குதல் மூலம் அவர்கள் சுயதொழிலில் ஈடுபடுவதற்கான வசதிகள் வழங்கப்பட்டது.

- **நெசவாளர்களைப் பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித்திட்டத்தைநடாத்துதல்**

புடவைக் கைத்தொழில் கூட்டுறவுச் சங்க நெசவாளர்களுக்கு பயிற்சியளிக்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 36 புதிய நெசவாளர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டது

- ***நூல் வர்ணமிடுதல் மற்றும் வர்ணக் கொள்கைமற்றும் வர்ண இணைப்புதொடர்பானபயிற்சிநிகழ்ச்சித் திட்டம்.***

மாகாணகைத்தறிக் கிராமங்களில் உள்ள கைத்தொழிலாளர்களுக்கு நூலை வெள்ளையாக்குதல், பூர்த்திசெய்தல், ஓரங்களுக்கு வண்ணமிடுதல் மற்றும் அச்சடுதல் தொடர்பான புதிய தொழில்நுட்பத்தினை அறிமுகப்படுத்தப்பட்டது. வர்ணமிடுதல் மற்றும் பாடநெறி பற்றிய விபரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

***நூல் வர்ணமிடுதல்பாடநெறி– 2012***

ஒதுக்கப்பட்ட நிதி ரூ. 10 மில்லியன்.

***நூல் வர்ணமிடுதல் மற்றும் வர்ணக் கொள்கைமற்றும் வர்ண இணைப்பு தொடர்பான பாடநெறி – 2012***

| | *நிகழ்ச்சித்திட்டம் நடைபெற்ற இடம்* | *செலவு செய்யப்பட்ட தொகை ரூபா* | *பங்குபற்றியமாணவர்களின் எண்ணிக்கை* |
|---|---|---|---|
| 1 | மத்தியமாகாணம் - ஹாரகம | 80,055.00 | 21 |
| 2 | வடமேற்குமாகாணம் - பொல்காவெல | 81,544.00 | 28 |
| 3 | தென்மாகாணம் - மாத்தறை | 76,599.00 | 22 |
| 4 | வுடமத்தியமாகாணம் - பண்டுலகம | 80,190.00 | 25 |
| 5 | மேல்மாகாணம் - கடவத்த | 73,840.00 | 22 |
| 6 | வடமாகாணம் - சுன்னாகம் | 85,955.00 | 26 |
| 7 | ஊவாமாகாணம் - ஹல்பே | 84,090.00 | 30 |
| | **மொத்தச் செலவு** | **562,273.00** | **174** |

**பெறுமதி சேர்பொருட்கள் உற்பத்திப் பயிற்சிப் பாடநெறி – 2012**

| | நிகழ்ச்சித்திட்டம் நடைபெற்ற இடம் | செலவு செய்யப்பட்ட தொகை ரூபா | பங்குபற்றி யமாணவர் களின் எண்ணிக் கை |
|---|---|---|---|
| 1 | திவுலுப்பிட்டிய | 53,510.00 | 25 |
| 2 | தலகுணே | 58,670.00 | 22 |
| 3 | பாலமுனை | 80;412.00 | 21 |
| 4 | காத்தான்குடி | 73.000.00 | 27 |
| 5 | ஆரயம்பதி | 57410.00 | 25 |
| 6 | வரையறுக்கப்பட்டகேகாலலநெசவுக் கூட்டுறவுச் சங்கம் | 53.035.00 | 23 |
| 7 | வரையறுக்கப்பட்டகுருநாகல்ச கூட்டுறவுச் சங்கம | 59,585.00 | 25 |
| 8 | பொலொன்னறுவைபந்திவவ நெசவுமத்தியநிலையம் | 70.032.00 | 25 |
| 9 | ஜா-எலவிதானசம்பத் மத்தியநிலையம் | 55,535.00 | 27 |
| 10 | வென்னப்புவவிதானசம்பத் மத்தியநிலையம் | 58,035.00 | 25 |
| | **மொத்தச் செலவு ரூ.** | **619224.00** | **245** |

2012 கைத்தறி நெசவு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தேசிய தொழில் முயற்சி அதிகார சபையினால் செயற்படுத்தப்படும் தனி நபர் மற்றும் கூட்டுறவு பிரிவுகளில் தொழில் முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துவதற்காக ரூபா 1 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்ததுடன், அதற்கான அனுமதி செயலாளரினால் 20.07.2012ம் திகதி வழங்கப்பட்டிருந்தது. அந்த நிதி ஒதுக்கீட்டினைப் பயன்படுத்தி நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த 06 பாடநெறிகளில் 02 பாடநெறிகள் மட்டுமே நடாத்தப்பட்டன. அதன் விபரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

தேசிய தொழில் முயற்சி அதிகார சபையினால் மாத்தறை, மதவதடத கூட்டுறவு தேசிய சபையில் செயற்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்திற்கான ரூபா 101,392 பெறுமதியான சிட்டைகள் 08.10.2012ம் திகதி எங்களுக்கு அனுப்பப்பட்டது. அந்தச் சிட்டைகளில் குறைகள் காணப்பட்டதனால் அதனை திருத்தி அனுப்புவதற்காக மீள 23.10.2012ம் திகதி தேசிய தொழில் முயற்சி அதிகார சபைக்கு கையளிக்கப் பட்டுள்ளது.

**கைத்தறிகளைபுதுப்பித்தல் நிகழ்ச்சித்திட்டம்**

இதன் கீழ் 07 மாகாணங்களில் 640 கைத்தறிகள் புதுப்பித்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மத்திய மகாணங்களில் உள்ள 125 நெசவுத்தறிகள், கிழக்குமாகணத்தில் உள்ள 60 நெசவுத்தறிகள் மற்றும் 28 சுற்றல்கள், ஊவாமாகாணத்தில் உள்ள 150 நெசவுத்தறிகள், வடமத்தியமாகாணத்தில் உள்ள 60 நெசவுத்தறிகள் திருத்தப்பட்டு மீள்பாவனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

**நெசவுக் கைத்தொழில் சேவைமத்திய நிலையத்தை புதுப்பித்தல் நிகழ்ச்சித்திட்டம்.**

- வடமேற்கு மாகாணத்தின் கொடவெல நெசவுகைத் தொழிற்சேவை மத்திய நிலையத்தை அமைப்பதற்கு ரூபா 11,896,000 நிதி வழங்கப்பட்டது.
- கிழக்குமாகாணத்தின் மட்டக்களப்பு மாவட்டத்தின் பாலமுனை நெசவு கைத்தொழிற்சேவை மத்திய நிலையத்தை அமைப்பதற்கு ரூபா 18,000,000 நிதி வழங்கப்பட்டது.
- நல்லூர் நெசவு கைத்தொழிற்சேவை மத்தியநிலையத்தை புதுப்பிப்பதற்கு ரூபா 410,152.48 நிதி வழங்கப்பட்டது.
- நெசவுக் கைத்தொழில் திணைக்களத்தின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்கு ரூபா 1,300,000 வழங்கப்பட்டது.
- கட்டுபத்த கட்டடத்தொகுதியின் புதுப்பித்தல் மற்றும் மேம்படுத்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- பயிற்சி நிறுவனங்களின் இயலளவினை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டத்திற்கு நெசவுத் திணைக்களத்திற்கு ரூபா 950,000 வழங்கப்பட்டுள்ளது.

- நெசவு ஆலோசனையாளர்களை இந்தியாவின் கேரளா பயிற்சி நிறுவனத்தில் பயிற்சியைப் பெற்றுக் கொள்வதற்காக அனுப்புவதற்கு ரூபா 3,000,000 வழங்கப்பட்டது.
- IT software package ஐ அறிமுகப்படுத்துவதற்காக இலங்கை புடவை மற்றும் ஆடை நிறுவனத்திற்கும் மற்றும் நெசவுத் திணைக்களத்திற்கும் ரூபா 1,200,000 வழங்கப்பட்டது.

**தேசிய கைத்தறி மற்றும் புடவைகள் கண்காட்சி**

தேசியகைத்தறி மற்றும் புடவைகள் கண்காட்சியோடு இணைந்து கண்காட்சிகளை ஒழுங்கு செய்வதற்காக மாகாணசபைகளுக்கு ஒதுக்கீடுகள், ஹொட்டலுக்காக தயாரிக்கப்பட்ட கைத்தறிப் படவைகள் கண்காட்சி என்பவற்றை ஒழுங்கு செய்வதற்காக நிஒதுக்கீடுகள் வழங்கப்பட்டுள்ளது. இதன் போது மாகாண சபை கண்காட்சிகளுக்கு ரூபா 1.8 மில்லியனும், ரன்சலுதேசிய கண்காட்சிக்காக ரூபா 2,879,289.11ம் மற்றும் ஊடக நிறுவனத்திற்கு ரூபா 877,077ம் வழங்கப்பட்டது.

**வடிவமைப்புஅபிவிருத்திக்கு கணணி மென்பொருளை அறிமுகப்படுத்தல்.**

இலங்கை புடவை மற்றும் ஆடை நிறுவனத்திற்கும் மற்றும் நெசவுத் திணைக்களத்தினால் இந்த நிகழ்ச்சித் திட்டம் செயற்படுத்தப்படுகின்றது. நெசவுத்துறைக்கு புதிய தொழில்நுட்பத்தினை அறிமுகப்படுத்தும் நோக்கத்துடன் வடிவமைப்பு அபிவிருத்திக்கான கணணி மென்பொருளை அறிமுகப்படுத்துவதற்காக அவசியமான நிதி இலங்கை புடவை மற்றும் ஆடை நிறுவனத்திற்கும் மற்றும் நெசவுத் திணைக்களத்திற்கும் வழங்கப்பட்டது.

**ஆடைகள் ஏற்றுமதிச் சேவைகள் பிரிவு**

இந் நாட்டிலிருந்து ஆடை மற்றும் துணி வகைகளை ஏற்றுமதி செய்யும் ஆடை உற்பத்தியாளர்களுக்கும், உற்பத்தி செய்யாத ஏற்றுமதியாளர்களுக்கும் அவசியமான சேவைகளையும் ஊக்குவிப்புகளையும் வழங்குதல் இப்பிரிவின் பணியாகும். இதன் கீழ் மேற்கொள்ளப்படும் பணிகளாக அமைவது, அமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட்டவர்களுக்கு அவசியமான, இயந்திர, உதிரிப்பாகம், அரை முடிவுப்பொருள், சாயம் மற்றும் இரசாயனப் பொருட்கள், மூலப்பொருட்கள் மற்றும் ஏனைய பொருட்கள் இறக்குமதியின் போது சுங்கத்தீர்வையினை வழங்குதல்

- கொள்வனவுக் காரியாலயம்,கொள்வனவுத் தொடர்புபடுத்தல் காரியாலயம் மற்றும் ஆடைத்தொழிற்சாலைகள் என்பவற்றில் பணிபுரியும் வெளிநாட்டு பதவி நிலையினர் மற்றும் தொழில்நுட்பவியலாளர்கள் என்பவர்களுக்கான வீசா சிபாரிசினை வழங்குதல்.
- ஏற்றுமதி ஆடைக் கைத்தொழிலுக்கு அவசியமான, இயந்திர, உதிரிப்பாகம், அரை முடிவுப்பொருள், சாயம் மற்றும் இரசாயனப் பொருட்கள், மூலப்பொருட்கள் மற்றும் ஏனைய பொருட்கள் இறக்குமதியின் போது சுங்கத்தீர்வையினை வழங்குதல் விரோதிகளின் பார்வையில் இருந்து மறைக்க உதவும் சாதனங்களை பயன்படுத்துவதற்கான சிபாரிசினை பாதுகாப்பு அமைச்சுக்கு வழங்குதல்.

**இலங்கைப் புடவை மற்றும் ஆடை நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட உற்பத்தித்திறனை மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம்**

சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழிற்சாலைகளின் நிலையான நிலைத்திருப்பிற்காக ஆலோசனைச் சேவைகள் நடாத்தப்பட்டது. இந் நிகழ்ச்சித்திட்டத்திற்காக 2012ம் ஆண்டு

ரூபா 11 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன், 10 கைத்தொழிற்சாலைகளின் உற்பத்தித்திறன் மேம்படுத்தப்பட்டுள்ளது.

**சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கான திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம். (இலங்கை புடவை மற்றும் ஆடை நிறுவனத்தினால் நடாத்தப்பட்டது)**

சிறியமற்றும் நடுத்தரக் கைத்தொழிற்சாலை ஊழியர்களின் மனித வளம் மற்றும் திறன் என்பவற்றினை அபிவிருத்தி செய்யும் நோக்கோடு இந்நிகழ்ச்சித்திட்டம் ஒழுங்கமைக்கப்பட்டது. இதற்காக 2012ம் ஆண்டிற்கு ரூபா 5 மில்லியன் ஒதுக்கப்பட்டது.

சிறிய மற்றும் நடுத்தர ஆடை மற்றும் புடவை உற்பத்தியாளர்களுக்காக, அவர்களின் தேவைக்கமைவாக 22 கைத்தொழிற்சாலைகளுக்கு 20 பயற்சி நெறிகள் 110 சேவையாளர்களுக்காக நடாத்தப்பட்டது.

**உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பிரதிவிம்பத்தினை மேலுயர்த்துதல் நிகழ்ச்சித்திட்டம் (ஒன்றிணைக்கப்பட்ட ஆடை சங்க பேரவையினால் அமுல்படுத்தப்படும்) (JAAF)**

ஒன்றிணைக்கப்பட்ட ஆடை சங்க பேரவையானது, ஆடை உற்பத்தியாளர்கள், ஏற்றுமதியாளர்கள், வழங்குனர்கள் மற்றும் கொள்வனவாளர்கள் எனும் இலங்கை ஆடை மற்றும் புடவைத்துறையின் அனைத்துத் துறையினரையும் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒர்நிறுவனமாகும்.

ஆடைக் கைத்தொழிற்துறையின் உள்நாட்டுமற்றம் வெளிநாட்டு பிரதிவிம்பத்தினை மேம்படுத்துவதற்காக கீழ்வரும் நிகழ்ச்சித்திட்டங்கள் தற்போது அமுல்படுததப்பட்டு வருகின்றது.

இந்நிகழ்ச்சிக்காக ரூபா 25 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்படடது.

அதில் ரூபா 9.48 செலவு செய்யப்பட்டு கீழ்வரும் நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டது.

(i) இணையம்,வெப்தளமற்றும் பராமரிப்புவசதிகள்

(ii) நிகழ்ச்சித்திட்டங்களையும் மாநாடுகளையும் நடாத்துதல்.

(iii) WWDவளக் கூட்டத்தொடர்மற்றும் CEOமன்றம்

(iv) கொழும்புநாகரீகவாரம் – 2012

(v) நேரடிச் சந்தை

(vi) ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தில் இலங்கையின் பெயரைப் பாதுகாத்தல்

(vii) வியாபாரச் சந்திப்புகள் (B 2 B print advertorials in WWD (US))

(viii) உள்நாட்டு பிரதிவிம்பத்தினை கட்டியெழுப்பல் (தயடகிருள)

# நெசவுக் கைத்தொழில் திணைக்களம்

## அறிமுகம்

இலங்கை யாப்பின் 13ம் திருத்தச் சட்ட மூலத்தின் படி கைத்தறி நெசவுக் கைத்தொழிற்துறை விடயமானது மாகாண சபைக்குரியதாகும். அதன்படி நெசவுக் கைத்தொழில் திணைக்களத்திற்குரிய பணியாக அமைவது, இவ்விடயதிற்குரிய கொள்கைத் தீர்மானங்களை எடுப்பதும், மாகாணசபைக்குரிய நெசவுப் பிரிவுடன் இணைந்து கைத்தொழிற்துறையின் அபிவிருத்திக்குரிய சேவைகளை வழங்குதலாகும்.

## 2012 டிசம்பர் 31ம் திகதியில் முன்னேற்றம்

### கட்டடப் புதுப்பித்தல்கள் மற்றும் கட்டுமானங்கள்

கட்டம்பே, வட்டப்புளுவ, யாழ்ப்பாணம், நல்லூர், ஹிர மடகன, மாத்தளை, குருநாகலையில் அமைந்துள்ள கைத்தறிப் புடவைபயிற்சிப் பாடசாலைகளை புதுப்பிக்கப்பட்டு கட்டுபத்தவில் அமைந்துள்ள பணிப்பாளர் பங்களாவின் மினசார விநியோக முறைமை, வடிகால் முறைமைகளை திருத்தப்பட்டது.

### கைத்தறி நெசவுத் துறைப் பயிற்சி மற்றும் திறன் அபிவிருத்தி

2012ஆம் ஆண்டுக்கான மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளும் நடவடிக்கைகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளதுடன், அதன்படி தேவைகளுக்கேற்ப கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டது.

புாட நெறிக்கு வருகை தரும் கட்டுபத்த, வடடப்புளுவ, மாத்தறை, பண்டாரவெல, கிரம, பின்னவல, சம்மாந்துறை, நல்லூர், கட்டம்பே, போயகன, பலாபத்வல ஹிரமடகம, சாந்திபுரவில் அமைந்துள்ள கைத்தறிப் புடவைபயிற்சிப் பாடசாலை மாணவர்களுக்கான வரவுக்கான கொடுப்பனவு வழங்கப்பட்டது.

2011 ஆம் ஆண்டு தேசிய கண்காட்சிக்காக கொடுப்பனவு செய்ய வேண்டிய நிர்வாகச் செலவு மேற் கொள்ளப்பட்டது.

2012 இல் கட்டுபத்த உயர்வடிவமைப்பு பாடநெறியினைகற்கும் மாணவர்களுக்கான வரவுக்கொடுப்பனவு வழங்கப்பட்டது.

2012 கட்டுபத்த, வடடப்புளுவ, மாத்தறை, பண்டாரவெல, கிரம, பின்னவல, சம்மாந்துறை, நல்லூர், கட்டம்பே, போயகன, பலாபத்வல, ஹிரமடகம, சான்திபுரவில் அமைந்துள்ளகைத்தறிப் புடவைபயிற்ச்ப் பாடசாலைகளில் ஆங்கில மொழியினைக் கற்பிற்கும் ஆசிரியர்களுக்கான கொடுப்பனவு வழங்கப்பட்டது.

'நிதிக் கற்கைகள்' நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளுக்கான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.. நெசவுப் பாடசாலை மாணவர்களின் தனித்தன்மையினை அபிவிருத்தி செய்வதற்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டது.

ஆரச கரும மொழிகள் நிகழ்ச்சிதிட்டத்திற்கான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டது.

நெசவு சார்ந்த விடயங்கள் தொடர்பாக– ஜக்கார்ட் (Jackard),ரப் அச்சிடுதல் (Warp printing), வண்ணம் இணைத்தல் (Color combination), உள்ளக வெற்றிட வடிவமைப்பு (Designing of inter-spaces), தும்பரரட்ட (Dumbara Rata) பாட நெறி நடாத்தப்பட்டது

### ஊக்குவிப்பு நடவடிக்கைகள்

2012 ஆம் ஆண்டு தயட கிரள நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கண்காட்சிக்கூடம் ஒழுங்குசெய்யப்பட்டது. இது தொடர்பாக நிர்வாகச் செலவுகள் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

நெசவுப் பாடசாலைகளுக்கு அவசியமான மூலப்பொருட்கள் தேவைக்கேற்ப கொள்வனவு செய்யப்பட்டது

கட்டம்பே, போயகன, கட்டுபத்த, பலாபத்வலவில் அமைந்துள்ள கைத்தறிப் புடவை பயிற்ச்ப் பாடசாலைகளுக்கு அவசியமான தளபாடங்களும் ஏனைய உபகரணங்களும் கொள்வனவு செய்யவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

**திணைக்களச் செயற்பாடுகள்**

கட்டுபத்த கட்டடத் தொகுதியில் மின்சார முறைமையினை திருத்துவதற்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு உரிய கேள்வி வழங்கப்பட்டுள்ளது.

கட்டுபத்த வகுப்பறைகளுக்கான கதிரைகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

கலகெதரவில் டாராகைத்தறிக் கருத்திட்டத்தினை ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

2012-07-27ம் திகதி கட்டுபத்தவில் புதிய வடிவமைப்பு வங்கி திறக்கப்பட்டது.

கட்டுபத்தவில் புடவை நூதன சாலை யொன்றினை நிறுவுப்படுகின்றது.

**கைத்தறி நெசவுத்துறைக்கு அவசியமான நிதி, தொழில்நுட்ப மற்றும் சந்தை வசதிகளை வழங்குதல்**

250 பயனாளிகள் பயிற்றுவிக்கப்பட்டதுடன், 150 நபர்கள் சுய தொழிலை ஆரம்பித்துள்ளனர். பயனாளிகள் 300 பேருக்கு நிதி மற்றும் வசதிகள் வழங்கப்பட்டுள்ளது.

**கைத்தறி நெசவுக் கிராமத்தினை உருவாக்குதல்**

பயனாளிகள் 100 பேருக்கு விற்பனை வசதிகள் வழங்கப்பட்டுள்ளதுடன், 300 பேருக்குநிதி, உபகரணம், மூலப்பொருள் மற்றும் ஏனைய வசதிகள் வழங்கப்பட்டுள்ளது.

**பெறுமதி சேர்த்தல், உற்பத்தியினை பன்முகப்படுத்தல் மற்றும் வடிவமைப்பு நிர்மாணிப்பை ஊக்குவித்தல்**

கட்டுபத்த வடிவமைப்பு கல்வி அலகின் ஊடாக நிர்மாணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. வடிவமைப்பு பயிற்சி பாடசாலை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 100 பயனாளிகளுக்கு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

**மனிதவள அபிவிருத்தி**

அலுவலகத்திற்கான பயிற்சி பாடநெறி 01ம் நெசவுப் பிரிவுக்கான பாடநெறி 03ம் நெசவுப் பாடசாலை மாணவர்கள் 180 பேருக்கு ஆராய்ச்சி பயிற்சி நிகழ்ச்சித் திட்டமும் நடாத்தப்பட்டது.

**புதிய தொழில் நுட்பப் பாவனையை உயர்த்துதல்**

வர்ண நூல்களை வர்ண மூட்டும் நடவடிக்கைகள் தொடர்பான சேவைகள் 150 தொழில் முயற்சியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதுடன்,

லோபோஜக்கிவியமன் கம்காட் பிலொக் பிரின்டிங் போன்ற உயர்தொழில்நுட்பங்களை பிரயோகித்துப் பார்க்கும் தொழில் முயற்சி யாளர்களின் எண்ணிக்கை 150 வரை உயர்த்தப்பட்டுள்ளது.

**வியாபாரச் சந்தைக்குள் நுழைவதற்கு வசதியளித்தல்**

இதன் கீழ் 50 பயனாளிகளுக்கு சேவை வழங்கப்பட்டுள்ளது.

**சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களின் அபிவிருத்தி**

திவி நெகும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் உபகரணங்களை வழங்குவதற்கு 252 பயனாளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

# இலங்கை புடவை மற்றும் ஆடை நிறுவனம்

## அறிமுகம்

இருபத்தி நான்கு வருடங்களுக்கு மேலாக கைத்தொழிந்துறைக்கு அளப்பரிய சேவையை யாற்றிய ஆடைக் கைத்தொழில் பயிற்சி நிறுவனம் (CITI) மற்றும் புடவைத்தொழில் பயிற்சி மற்றும் சேவைகள் மத்திய நிலையம் (TT & SC) 2009 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் இலங்கை புடவைமற்றும் ஆடை நிறுவனமாக ஒன்றிணைக்கப்பட்டு 2009 ஜூன் 15ம் திகதியில் இருந்து செயற்பட ஆரம்பித்தது. இத்தந்திரோபாயத்தினால் இருக்கும் மனித வளம், இயந்திரங்கள், நிலம் என்பனவற்றை உபயோகித்து வினைத்திறனுள்ள மற்றும் செயற்திறனுள்ள சேவையினை வழங்க முடியும். அத்தோடு நிறுவனத்தின் அமைப்பினை மீளமைப்பு செய்வதினால் வியாபார சவால்களுக்கு முகம்கொடுக்க முடியுமென்பதோடு, வாடிக்கையாளர்களுக்கு உயர்ந்த சேவையினை வழங்குவதே இந்நிறுவனத்தின் குறிக்கோளாகும். இலங்கை புடவை மற்றும் ஆடை நிறுவனத்தின் மீளமைக்கப்பட்ட முகாமைத்துவத்தில் ஒவ்வவொரு அலகிற்கும் ஒவ்வொரு நபருக்கும் பொறுப்புகளும் அதிகாரங்களும் தெளிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

## 2012 டிசம்பர் 31ம் திகதி வரையிலான முன்னேற்றம்

### பயிற்சியளித்தல்

புடவைமற்றும் ஆடைத்துறை சாதக வளர்ச்சியினைக் காட்டியதனால், 2012ம் ஆண்டினுள் பயிற்சி நடவடிக்கைகள் வளர்ச்சினைக் காட்டுகின்றது.

இக் கற்கை நெறிக்கு மொத்தம் 60 பயிலுனர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

இந்த குறுகியகால 14 சான்றிதழ் மட்ட பயிற்சிநெறிக்கு மாணவர்களும் தொழில்புரிவோரும் இணைந்து கொண்டனர்.

சிறிய மற்றும் மத்திய தர புடவை மற்றும் ஆடைக் கைத்தொழிற்சாலைகளைச் சேர்ந்தவர்களுக்கும் அவர்களின் தேவைக்கேற்ப 17 விசேட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டது.

இத்தோடு இத்துறையின் நிலைத்திருக்கும் தன்மையை உருவாக்குவதற்காக, முகாமைத்துவ அறிவு மற்றும் மத்திய தனிநபர் முகாமைத்துவ தொழில்நுட்பம் என்பவற்றை உயர்த்துவதற்கு 11 சிறிய மற்றும் மத்திய அளவிலான கைத்தொழிற்சாலைகளுக்கு உற்பத்தி செயற்திறனை மேம்படுத்தும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் நடத்தப்பட்டது.

### பரிசோதனை சேவை

இந்தியாவின் ஆலோசனை நிறுவனமான இன்டெக் இந்தியா நிறுவனத்தின் உதவியோடு வரையறுக்கப்பட்ட குறிப்பெயர் சான்றழிப்பு (Limited BrandAccreditation) உம் 2012 ஆண்டுகளுக்காக புதுப்பிக்கப்பட்டது.

இந்நிறுவனத்தின் மூன்று தொழில்நுட்ப அலுவலர்கள் குழாய் அளவீடு மற்றும் பரிசோதனை முறைகள் தொடர்பான குறுங்கால பயிற்சி நெறிக்காக டை ஸ்டார் தனியார் நிறுவனத்திற்கு பயிற்சிக்காக அனுப்பிவைக்கப்பட்டனர்.

### ஆலோசனை சேவை

கிராம நெசவுச் சமூகத்திறகாக தென் மாகாணத்தில் வர்ணம் தோய்க்கும் நிலையமொன்றினை நிறுவுவதற்கான முன் மொழிவு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

### உற்பத்தித்திறனை மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம்

சிறிய மற்றும் மத்திய அளவிலான ஆடை மற்றும் புடவை கைத்தொழிற்சாலைகளுக்கு ஆலோசனைச் சேவைகள் வழங்கப்படுகின்றது.

இந்நிகழ்ச்சித் திட்டத்திற்கு 05 கைத்தொழிற் சாலைகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

இதற்காக கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சின் ஊடாக ரூபா 11 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், 2012 ஆண்டினுள் 11 ஆலோசனைச் சேவைகள் வழங்கப்பட்டுள்ளது.

### ஆடைத்துறைக்கான திறன் அபிவிருத்தி பயிற்சித்திட்டம்

சிறிய மற்றும் மத்திய அளவிலான ஆடை மற்றும் புடவை உற்பத்திக் கைத்தொழிற்சாலை ஊழியர்களின் திறனை மேம்படுத்துவதற்காக 20 பயிற்சித்திட்டங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளது.
இதன்கீழ் 17 நிறுவனம் சார்ந்த மற்றும் உள்ளகப் பயிச்சி நெறிகள் நடாத்தப்பட்டு, 459 கைத்தொழிலாளர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர். இதற்காக கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சு ரூபா 5 மில்லியனை ஒதுக்கியுள்ளதுடன், 2012 ஆண்டு ரூபா 4 மில்லியன் செலவு செய்யப்பட்டது.

### புாதணி மற்றும் தோற்பொருட்துறை அபிவிருத்தி பயிற்சி கருத்திட்டம்

தோற்பொருட்கள் மற்றும் பாதணி ஆலோசனைச் சபை மற்றும் அமைச்சுடன் இணைந்து தோற்பொருட்கள் மற்றும் பாதணித்துறைக்கு குறுகிய கால பாடநெறியொன்றினை 2012 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

# வணிகப் பிரிவு

# வணிகத் திணைக்களம்

**அறிமுகம்**

இலங்கையின் வெளிநாட்டு வர்த்தக உறவுகளை இருதரப்பு பிராந்திய மற்றும் பலதரப்பு மட்டங்களில் விருத்தி செய்து ஊக்குவிக்கும் நோக்குடன் வெளிநாட்டு வர்த்தக கொள்கையினை வகுத்தல் ஒருங்கிணைத்தல் மற்றும் அமுலாக்கல் இதன் பணியாகும்.

வர்த்தக திணைக்களமானது பல்தரப்பு வர்த்தக விவகாரங்கள் இருதரப்பு வர்த்தக உறவுகள் பிராந்திய ஒத்துழைப்பு மற்றும் வர்த்தக ஊக்குவிப்பு ஆகிய நான்கு பிரிவுகளைக் கொண்டுள்ளது.

**2012 டிசம்பர் 31ம் திகதியில் முன்னேற்றம்**

**பலதரப்பு வர்த்தக உறவுகள்**

- **உலக வர்த்தக நிறுவனம் (WTO)**

உலக வியாபார அமைப்பு தொடர்பாக இலங்கையினுள் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் தேசிய நிறுவனமாக வணிகத் திணைக்களம் செயற்படுகின்றது.

இங்கு குறைந்த விலைக்கு விற்பனை செய்யப்படும் நிவாரண ஏற்றுமதிகள் தொடர்பாக தொடர்பாக செயற்படுத்துவதற்கான தேசிய முறைமை வரைவினை மேற்கொள்கின்றது.

- **வர்த்தக முன்னுரிமையின் உலகளாவிய முறைமை (GSTP)**
- வர்த்தக முன்னுரிமையின் உலகளாவிய முறைமையின் மூன்றாவது சுற்றில் இலங்கை பங்குபற்றியது.

➢ **பிராந்திய விவகாரங்கள்**

- **தென்னாசிய சுதந்திர வர்த்தக பிரதேசம் (SAFTA)**
  - SAFTA நிபுணர்கள் குழுவின் ஏழாவது கூட்டம் (SCOE),நடாத்தப்பட்டது.

